விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 தை 24 சனிக்கிழமை (06.02.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 49

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

## வடக்கு மக்களின் உரிமையை அரசாங்கம் பறித்துவிட்டது!

### மக்கள் விடுதலை முன்னணி கூறுகிறது

(கொழும்பு)

அரசாங்கம் பல்வேறு கோஷங்களை முன்வைத்து வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம் என பல்வேறு வழிமுறைகளை முன்வைத்தபோதிலும் மக்கள் தற்போதைய அரசாங்கத்தின் மோசடி செயற்பாடுகளை நிராகரித்திருப்பதாக ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற அவசர காலச் சட்டத்தை நீடிக்கும் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

கடந்த 26 ஆம் திகதி அரசாங்கம் வட பகுதி மக்களின் இறுதி உரிமையையும் இல்லாமல் செய்தது. வாக்களிக்கும் உரிமையே இறுதியாக இருந்தது. (16ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற உறுப்பினராக அருள்சாமி சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)

காலஞ்சென்ற மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரனின் வெற்றிடத்திற்கு எஸ்.அருள்சாமி நியமிக்கப்பட்டு நேற்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

சபாநாயகர் டபிள்யூ.ஜெ.எம்.லொக்குபண்டார முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொள்ளப்பட்டது. கடந்த பொதுத் தேர் தலின் போது (16ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டில் நல்லநிலை ஏற்படும்வரை அவசரகாலச்சட்ட நீடிப்பு அவசியம்



### பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க மன்றில் உரை

(கொழும்பு)

நாட்டில் சரியான நிலைமை ஏற்படும்வரை அவசரகாலச்சட்டம் நீடிக்கப்பட வேண்டியது அவசியமாகும் என பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார். நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற நாடாளுமன்ற கூட்டத் தொடரில் அவசரகாலச் சட்டம் 87 மேலதிக வாக்குகளால் மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கப்பட்டது. அவசர காலச்சட்ட பிரேரணையின் பின்னர் உரையாற்றிய போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்மக்கள் விடுதலைப்புலிகளில் சிறுவர்கள் இணைக்கப்படுகின்றனர்

### ஐ.நா. சபை குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் தொடர்ந்தும் சிறுவர்களை படையில் இணைத்துவருவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது.

சிறுவர் மற்றும் ஆயுதப் போராட்டம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் விசேடபிரதிநிதி மேஜர் ஜெனரல் பெற்றிக்கெமாாட் இலங்கை விஜயத்தின் பின்னர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்ததகவல் வெளியிட்டுள்ளது.

இரண்டு (16ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் முடிவுகளுக்கு எதிராக ஐ.தே.மு. அடுத்தவாரம் வழக்கு

(கொழும்பு)

ஜனாதிபதித்தேர்தல் முடிவுகளை தாம் முற்றாகப் பகிஷ்கரிப்பதாக எதிர்க்கட்சியினர் ஏற்கனவே அறிவித்திருந்த நிலையில் அது தொடர்பாக இன்னும் ஓரிரு தினங்களில் உயர் நீதிமன்றில் வழக்குத் தொடரவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் இத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதித் (16ஆம் பக்கம் பார்க்க)

## மகனைக் காணவில்லை பெற்றோர் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

ஏழாலை பகுதியை சேர்ந்த பாடசாலை மாணவரொருவர் கடந்த 10 நாட்களாக காணவில்லை என சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் பெற்றோர் முறையிட்டுள்ளனர்.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் தரம் 11 இல் கல்வி பயிலும் புவனேந்திரன் புவிதரன் (வயது-16) என்ற மாணவன் கடந்த புதன் கிழமை மாலை (16ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் தீர்வுத்திட்டத்தை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

(கொழும்பு)

அரசியல் தீர்வு ஒன்றினை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த 30வருட காலமாக தமிழ், முஸ்லிம் மக்கள் அனுபவித்து வரும் துன்ப துயரங்கள், அகதி வாழ்விற்கு (16ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச்சட்டம் மேலும் நீடிப்பு

(கொழும்பு)

அவசர காலச் சட்டம் நேற்று நாடாளுமன்றத்தில் 87 மேலதிக வாக்குகளால் நிறை வேற்றப்பட்டது. நாடாளுமன்றத்தில் நேற்று அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரேரணைக்கு ஆதரவாக 102 வாக்குகளும், எதிராக 15வாக்குகளும் அளிக்கப்பட்டன. தமிழ்த் (16ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதித் தேர்தலை தொடர்ந்து இலங்கையில் பிரிவினை அதிகரிப்பு

### த அல்ஜசீரா செய்தி வெளியீடு

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து அங்கு பிரிவினைகள் மேலும் அதிகரித்துள்ளன. ஆனால் தற்போது தான் இலங்கை தனது ஒற்றுமையை தேடுகின்றது என த அல்ஜசீரா செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

அதன் தமிழ் வடிவம் வருமாறு, இலங்கையில் நெருக்கடிகளை குறைப்பதற்கு சிறுபான்மை தமிழ் மக்கள் உதவ வேண்டும் என இலங்கை ஜனாதிபதி தனது சுதந்திரதின உரையில் கேட்டுக்கொண்டுள்ளார். உள்நாட்டுப் போர் முடிவடைந்த பின்னர் நடைபெற்ற முதலாவது சுதந்திர தினம் இதுவாகும்.

கண்டியில் உரையாற்றிய மகிந்த, தமிழ் மக்களுக்கு சுயாட்சி அதிகாரம் வழங்கப்பட மாட்டாது எனத் தெரிவித்ததுடன் தமிழ்மக்கள் அரசுடன் இணைந்து இயங்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

கலந்துரையாடல்கள் மூலம் எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக்கொள்ளவேண்டும் என அவர் (16ஆம் பக்கம் பார்க்க)

# நடைபாதை வியாபாரத்தை ஆரம்பிக்க முனியப்பர் ஆலயப் பகுதியில் இட ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

கோட்டை முனியப்பர் ஆலயப் பகுதியில் நடைபாதை வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாநகர சபை முதல்வர் அறிவித்துள்ளார்.

யாழ்.நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் நடைபாதை வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குரிய இடங்களைத் தெரிவு செய்வதற்கான விசேட கூட்டம் நேற்று மாலை 3.30 மணியில் யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் மாநகர சபை மண்டபத்தில் இடம் பெற்றது.

இதில் கடந்த 28 ஆம் திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தின் போது 6 அங்கத்தவர்களைக் கொண்ட உப குழு நியமிக்கப்பட்டு அக் குழு சிபார்சு செய்ததன்படி முனியப்பர் கோவில் பக்கமாகவுள்ள இடத்திலிருந்து யாழ்.பிரதம தபாலகத்திற்கு எதிர்ப்பக்கமாகவுள்ள பகுதிகளில் நடைபாதை வியாபாரிகள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் வியாபார நடவடிக்கை மேற்கொள்வதற்காக ஒருவருக்கு 10X10 சதுர அடி இடம் மட்டும் ஒதுக்கப்படும்.

இதற்கென நாள் ஒன்றுக்கு தினமும் குத்தகையாக 100 ரூபாய் அறவிடப்படுவதாகவும் ஆயிரம் ரூபாயைப் பாதுகாப்பு வைப்பில் இடவேண்டும்.

வியாபாரி ஒருவர் 3 நாளைக்கு வியாபாரத்தில் ஈடுபடவில்லையாயின் அவ்விடத்தை வேறு ஒருவருக்கு வழங்கப்படவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வீதியின் மத்திய பகுதியில் இருந்து 50 அடிக்கு மேற்பட்ட பகுதியில் மட்டுமே வியாபாரம் மேற்கொள்ள அனுமதிக்கப்படுவர்.

வியாபாரம் மேற்கொள்ளபவர் மாநகர சபையின் அனுமதி பெற்றே வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிக்கப்பட வேண்டும் என இக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. (ச-30)

# வரவேற்பாளர் நியமனம் நேர்முகத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெறவிருந்த வரவேற்பாளர் நியமனத்திற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 11 , 12 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ள பரீட்சார்த்திகளின் கடிதத்தில் குறிக்கப்பட்டுள்ளதற்கு அமைவாக கடந்த 18.12.2009 ஆம்திகதிமு.ப.9.30மணிக்குஅழைக்கப்பட்டுள்ளவர்களுக்கு 11 ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கும் பிற்பகல் 1.30 மணிக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு 11 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கும் நடைபெறும்.

கடந்த 19.12.2009 ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு எதிர்வரும் 12 ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கும் 19 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு 12 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கும் நேர்முகப் பரீட்சை நடைபெறும் என அரசாங்க அதிபர் க. கணேஷ் தெரிவித்துள்ளார். (ச-3)


## தேவை

பான்ஸி பொருட்கள் விற்பனையில் அனுபவம் உள்ள பெண் பிள்ளைகள் தேவை.
நேரில் வரவும்.

**மது பான்ஸி ஹவுஸ்**
யாழ். வீதி,
மானிப்பாய்.
(C-4386)

## விற்பனைக்கு

புறோயிலர் இறைச்சிக் கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு:
பெரிய கிணற்றடி,
கணேஸ்வரம்,
அளவெட்டி.
*T.P.: 0778545389*
*0213211817*
(573)


## வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி

யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை அதிபர் செல்வி ந.பிரதா தலைமையில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் கல்விக் கோட்டப் பணிப்பாளர் செ.குபேரநாதன் அவர்களும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி பி.அம்பிகைபாகனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ச)

# சரணடைந்த படையினர் தடுத்து வைத்து விசாரணை

கடந்த காலங்களில் படையில் இருந்து தப்பியோடியவர்களுக்கு நேற்றுமுன்தினம் முதல் வழங்கப்பட்ட பொது மன்னிப்பு அடிப்படையில் இதுவரை ஆயிரத்து 422 படையினர் சரணடைந்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக்கார தெரிவித்துள்ளார்.

சரணடைந்த ஆயிரத்து 422 பேரும் தடுப்பு முகாம் ஒன்றில் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளது டன் அவர்கள் கடமையாற்றிய படையணிகளுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் கூறினார்.

இதுவரையில் சரணடையாமல் இருக்கும் படையினரை இராணுவப் பொலிஸாரின் உதவியுடன் கைது செய்து இராணுவச் சட்டங்களின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் கூறினார்.

தாம் அறிவித்த பொது மன்னிப்பு நல்ல பலனைத் தந்துள்ளதாக கூறிய இராணுவப் பேச்சாளர், தப்பியோடிய படையினர் அனைவரும் தாமாக முன்வந்து சரணடைய வேண்டும் என்றும் கூறினார்.

கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடைபெற்ற யுத்தத்தின் போது ஆயிரக்கணக்கான படையினர் தப்பியோடி சட்ட விரோத செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களில் பலர் கைது செய்யப்பட்டுயுத்த களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்றார். (ச-9)

## மெய்வல்லுநர் போட்டி

ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி நாளை காலை 8.30 மணிக்குப் பாடசாலை முன்றலில் அதிபர் மு.முரளிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சடடத்தரணி ப.யோ.அன்ரனியும் சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா, இளைப்பாறிய ஆசிரியை செல்வி வ.தேன்மொழி ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (ச-3)

## பாராட்டு விழா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வணிக முகாமைத்துவத் துறையில் முதலாவது பேராசிரியராகத் தெரிவு செய்யப்பட்ட பேராசிரியர் க.தேவராஜாவை கௌரவித்து பாராட்டு விழா நாளை பிற்பகல் 3 மணியளவில் இணுவில் பொது நூலக கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

கொக்குவில் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பேராசிரியரைப் பாராட்டி விருதும் வழங்கப்படவுள்ளது. (ச-9)

## மகளிர் அபிவிருத்தி நிலைய தொழில்திறன் கண்காட்சி

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவால் நடத்தப்படும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தொழில்திறன் கண்காட்சி இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்.நாவாந்துறை றோ.க. வித்தியாலயத்தில் யாழ்.பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மாலினி பாஸ்கரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் கலந்து கொள்கின்றார். (ச-4,6)


## முதன் முறையாக யாழ் மாநகரினிலே

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
**& Computer Express**

BCHS

ஆகிய இரு நிறுவனங்கள் எம் மக்கள் அனைவரினதும் நன்மை கருதி
அவர்களின் ஆங்கில , கணனி அறிவினை மேம்படுத்துவதற்காக

## 100 % புலமைப்பரிசில்களுக்கான மாபெரும் போட்டிப்பரீட்சை

இப்பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் **10** மாணவர்களுக்கு **P4** கணனிகள் பரிசாக வழங்கப்படும்.



**இப்போட்டிப்பரீட்சைக்கு தோற்றத்தகுதியுடையோர்**
பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்கள், அரச, தனியார்துறையில் வேலை செய்பவர்கள், எதிர்காலத்தில் சர்வதேசப் பல்கலைக்கழகங்களில் படிப்பினைத் தொடரவுள்ளோர், ஏனையோர்கள்.

**விண்ணப்ப முடிவுத்திகதி 24.02.2010**

போட்டிப்பரீட்சையில் ஆங்கிலம், கணனி அறிவினை பரிசோதிக்கும் இரண்டு வினாத்தாள்கள் வழங்கப் படும். இவை ஒவ்வொன்றும் ஒரு மணித்தியால நேர எல்லையைக் கொண்டது ஆங்கில வினாத்தாளில் மாணவர்கள் பெறும் புள்ளிகளிற்கேற்ற வகையில் புலமைப்பரிசினை பெற்றுக்கொண்டு அவர்கள் lower level, Intermediate level, Upper level எனப்பிரிக்கப்பட்டு, அடிப்படையிலிருந்து ஆங்கிலப் பயிற்சியினை British Council நிறுவனத்தின் ஆங்கில கற்கை நெறிகளிற்கு இணையாக நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய Audio, visual முறையில் துறைசார் அனுபவம் மிக்க ஆசிரியர்குழாமினால் பயிற்றுவிக்கப்பட்டு அவர்களுடைய வாழ்வில் வளமான எதிர் காலத்தினை ஆளுமை விருத்தியுடன் அடைவதற்கு 100% உறுதிப்பாடு வழங்கப்படும்.

போட்டிப்பரீட்சையில் கணனிப்பரீட்சையில் தோற்றும் மாணவர்கள் பெறும் புள்ளிகளிக்கேற்ற வகையில் அனைத்து Diploma, Advanced Diploma கற்கை நெறிகளில் 100% புலமைப் பரிசினை பெற்றுக் கொள்வதோடு நிகழ்கால தொழிற்துறையில் கணனித் தேவைப் பாட்டிற்கமைவாக அவர்கள் அதிநவீன கணனி ஆய்வுகூடத்தில், நடைமுறையிலுள்ள வினைத்திறன்மிக்க மென் பொருளினூடாக நீண்டகால அனுபவம் மிக்க புலமைசார் விரிவுரையாளர்களால் தெரிவு செய்யப்படும் மாணவர்கள் பயிற்றுவிக்கப்படுவதோடு சர்வதேச அங்கீகாரம் கொண்ட சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களை** எமது British College Of Higher Studies, Computer Express நிறுவனங்களிலும், பூபாலசிங்கம், அன்னை புத்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு எவ்வித முன்கட்டணமும் அறவிடப்படமாட்டாது

**பரீட்சார்த்திகள் கவனத்திற்கு** பரீட்சார்த்திகள்/பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் கீழே காணப்படும் விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்திசெய்து அதன் பிரதியை நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோ BCHS அல்லது Computer Expressக்கு அனுப்பிவைப்பதுடன் அதன் மூலப்பிரதியுடன் பரீட்சை நிலையத்திற்கு நேரடியாக சமூகமளிப்பதனூடாக பரீட்சைக்கு தோற்ற முடியும்.

**பரீட்சை நிலையங்கள்**

| | | |
|---|---|---|
| யாழ் மத்திய கல்லூரி | 27.2.2010 | 10.00 - 12.00 |
| இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி | 28.2.2010 | 10.00 - 12.00 |
| நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 28.2.2010 | 10.00 - 12.00 |
| சாவகச்சேரி இந்துக்கல்லூரி | 28.2.2010 | 10.00 - 12.00 |

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
Second Floor,
No 15 Sirampiyady Lane,
Off Stanley Road. Jaffna.
Tel: 021 2224550 / 0714299935
0777585913 Email: info@bchs.lk
(ஆரியகுளம்சந்திக்கு அருகில் கொசி Hotel மேல்)
(C-4394)

**Computer Express**
No 167, Kasthuriyar Road,
Jaffna.
Tel: 021 2228250 / 0777222422
(உதயன் பணிமனை
அருகாமை நாவலர்சந்தி)

**Application Form**

Full Name : ..................................... Phone No.: ....................
Address : ....................................... Mail ID : ....................
Center : ........................................ Date. ....................
Sex : .............. N.I.C.No.: .................. Signature ....................

# இன்று ஒரு தகவல்

## எது செல்வம்?

இரவு நேரம். ஒரு மன்னன் குதிரை மீதேறி நகர்வலம் வந்து கொண்டிருந்தான். அடிக்கடி அவன் இப்படி வருவது வழக்கம்.

நாட்டு மக்கள் எப்படி இருக்கிறார்கள்? அவர்களுடைய வாழ்க்கைத்தரம் எப்படி இருக்கிறது? என்பதை நேரடியாகத் தெரிந்து கொள்வதற்காகத்தான் அம்மன்னன் இப்படி நகரத்தைச் சுற்றி வருவதுண்டு.

இப்படி வரும் போதெல்லாம் தவறாமல் அவனுடைய கண்ணில் படும் காட்சி ஒன்று உண்டு.

அதாவது ஒரு மரத்தடியில் எந்நேரமும் ஒரு பிச்சைக்காரன் நின்று கொண்டிருப்பான்.

ஒவ்வொரு தடவையும் அவன் அந்தப் பிச்சைக்காரனை அதே இடத்தில் பார்ப்பதுண்டு.

அப்படிப் பார்க்கும் போதெல்லாம் மன்னனுக்கு ஒரு சந்தேகம்.

இந்தப் பிச்சைக்காரன் ஏன் தூங்குவதேயில்லை.

ஒருநாள் அந்த மன்னன் பிச்சைக்காரன் இருந்த அந்த மரத்துக் கருகில் கொண்டு போய் குதிரையை நிறுத்தி விட்டு கீழே இறங்கினான்.

அந்தப் பிச்சைக்காரனைப் பார்த்து ,

"நான் தினமும் இந்த வழியாக வந்து கொண்டிருக்கிறேன். உன்னையும் பார்த்துக் கொண்டு இருக்கிறேன். உன்னுடைய செயல் வியப்பாக இருக்கிறது."

"என்ன வியப்பு?"

" நீ தூங்கி நான் பார்த்ததேயில்லை. நள்ளிரவில் கூட நீ முழித்துக் கொண்டே இருக்கிறாய். நீ ஏன் தூங்குவதேயில்லை? இது தான் என்னுடைய சந்தேகம்"

பிச்சைக்காரன் போல தோற்றமளித்த அந்தத் துறவி இதற்குப் பதில் சொன்னார்.

"காவல் காத்துக் கொண்டிருக்கிறேன்."

"காவலா?"

" ஆமாம். ஏதோ ஒன்று எனக்குக் கிடைத்திருக்கிறது. அதைக் கட்டிக் காப்பாற்றுக் கொண்டிருக்கிறேன்."

அரசர் அங்கும் இங்கும் திரும்பிப்பார்த்தார். பக்கத்தில் ஒரு பிச்சைப் பாத்திரம் தான் கண்ணில் பட்டது.வேறெதுவும் தெரியவில்லை.

"என்ன தேடுகிறீர்கள்?" என்றார் துறவி.

"உங்களுக்கு என்ன கிடைத்திருக்கிறது என்று தேடுகிறேன்" என்றார் அரசன்.

"அதற்கு ஏன் வெளியில் தேடுகிறீர்கள் எனக்குக் கிடைத்தது எனக்குள்ளே இருக்கிறது. அதை இழந்து விடக்கூடாது என்பதற்காகத்தான் விழித்துக் கொண்டே இருக்கிறேன். தூங்கினால் அது பறிபோய் விடுமோ என்று பயமாக இருக்கிறது.

மயக்கத்தில் நான் அதை மறந்தாலும் மறந்துவிடுவேன். அதற்காகத்தான் இந்த விழிப்புணர்வு.

"எனக்கு ஒன்றுமே தெரியவில்லை" என்றார் மன்னர்.

" உள்ளே போக முடியவில்லை என்றால் உனக்கு எப்படி அது தெரியும்?"

"உன்னிடம் இருப்பது அவ்வளவு பெரிய செல்வமா?"

"ஆமாம் "

"அப்படியானால் என்னிடமும் நிறைய செல்வம் இருக்கிறது."

"உண்மை தான்"

"அப்படி இருக்கும் போது உனக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்?"

துறவி சொன்னார்..

"மன்னா! பெரிய வித்தியாசம் ஒன்றுமில்லை.

கொஞ்சம் தான் வித்தியாசம். அது என்ன வென்றால்...

நீ வெளிப்பக்கமாக செல்வந்தனாக இருக்கிறாய்.

நான் வெளிப்பக்கமாக ஏழையாக இருக்கிறேன். நான் உள்பக்கமாக செல்வந்தனாக இருக்கிறேன். நீ உள்பக்கமாக ஏழையாக இருக்கிறாய்."

"அப்படியானால்?"

" நான் ஏழையாகவும் இருக்கிறேன் ,செல்வந்தனாகவும் இருக்கிறேன். அதேபோல் நீயும் ஏழையாகவும் செல்வந்தனாகவும் இருக்கிறாய். அதனால்தான் பெரிய வித்தியாசம் இல்லை என்றேன். நீ புறத்திலே செல்வந்தன். நான் அகத்திலே செல்வந்தன். அவ்வளவு தான்." துறவியின் இந்த விளக்கத்திலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்ன தெரியுமா? விழிப்புணர்வோடு வாழ்ந்தால் நாம் எங்கே இருக்கிறோமோ அதுதான் சொர்க்கம். உறங்கிக் கொண்டே வாழ்ந்தால் நாம் இருக்கின்ற இடமே நரகம்.

இது ஞானிகள் வாக்கு.

நம்ம ஆள் ஒருத்தர்,

"எனக்கு தினமும் ஒரு தடவை விழிப்புணர்வு வருகிறது." என்றார்.

பக்கத்திலிருந்தவர் "எப்பொழுது? " என்றார்.

" தினமும் தூங்கி எழுந்திருக்கும் போது".

தூங்கி விழிப்பது என்பது வேறு, ஞானிகள் சொல்லும் விழிப்புணர்வு வேறு.

அதை நாம் தவறாக புரிந்து கொள்ளக்கூடாது. ஒரு நண்பர் வேடிக்கையாகச் சொன்னார்.

"நான் எப்பொழுதும் விழிப்புணர்வோடு தான் இருப்பேன். ஆனாலும் என்னுடைய சொர்க்கவாழ்க்கை இந்த மாதம் 14 ஆம் திகதிவரைக்கும் தான்" என்றார்.

"ஏன் அப்படி?"

"அன்றைக்குத்தான் எனக்குக் கல்யாணம்."

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நல்லூர் பிரதேச சபையின்

# டெங்கு நோய் தடுப்பு விழிப்புணர்வு செயற்பாடு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச டெங்கு நோய்க் கட்டுப்பாட்டு ஒருங்கிணைப்புக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை கொக்குவில் பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தின் போது டெங்கு நோய் தடுப்பு தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய நல்லூர் பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட அனைத்து அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புடன் எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு பிரதேசத்தின் குடியிருப்பு மற்றும் குடியிருப்பற்ற காணிகள் முழுமையாக பரிசீலிக்கப்படவுள்ளன.

அத்துடன் பிரதேசத்தின் சுகாதாரத்திற்கு அச்சுறுத்தலாக இருப்பவர்கள் எச்சரிக்கை செய்யப்படுவதுடன் அன்றைய தினம் இப்படிப்பட்ட தவறுகளை நிவர்த்தி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதற்கமைய திணைக்களப் பிரதிநிதிகள் 15 பேர் அடங்கிய குழுவினர் தங்களிற்கென ஒதுக்கப்பட்ட கிராம அலுவலர் பிரிவிற்குரிய பணிமனையில் ஒன்று கூடி அங்கு தயார் நிலையிலுள்ள கிராம மட்டக்குழுவுடன் இணைந்து வீடுகள் தோறும் களப் பரிசோதனை மேற்கொள்ளவுள்ளனர்.

மேலும் குறைபாடுகள் இனங் காணப்பட்ட வீட்டுரிமையாளர்கள் இதனை சீர்செய்யுமாறு அறிவுறுத்தப்படுவர்.

அன்றைய தினம் J/114, J/115, J/122, J/ 107, J/ 109, J/ 110, J/ 111 , J/91, J/92 , J/ 93, J/ 94 , J/95, J/96, J/99, J/ 127, J/100 , J/ 108 , J/106, J/ 97 , J/98, J/ 101, J/121, J/123, J/ 124, J/ 103, J/ 105, J/ 118, J/125 , J/ 126 , J/128, J/ 116 , J/117, J/ 119, J/ 112, J/ 113, J/ 102, J/ 104, J/ 120 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள நல்லூர் பிரதேச செயலகம், பிரதேச சபை, யாழ். மாநகரசபை, கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம், நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, பெரியபுலம் மகாவித்தியாலயம், கொக்குவில் இந்துக்கல்லூரி, கொக்குவில் மேற்கு சனசமூக நிலையம், ஆயுள் வேத பாதுகாப்புச் சபை, யாழ். தொழில்நுட்பக்கல்லூரி நாராயண சனசமூக நிலையம், கொக்குவில்நேதாஜி சனசமூக நிலையம், உயரப்புலம் மத்திய மகா வித்தியாலயம், கொக்குவில் ஸ்ரீஞான பண்டித வித்தியாசாலை, கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம், இராமகிருஸ்ண வித்தியாசாலை, செங்குந்தா இந்து பாடசாலை, அரியாலை விவசாய சம்மேளனம், யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, விவசாயத் திணைக்களம் போன்ற இடங்களில் டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகள் நடைபெறவுள்ளதாக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (2-30)

# கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வு

இலங்கை மஞ்சி பிஸ்கற் ஸ்தாபனத்தாரின் அனுசரணையுடன் யாழ் மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தினர் நடத்திய கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதி நிகழ்வு இன்று சனிக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ் மாவட்ட கரப்பந்தாட்ட சங்க மைதானத்தில் சங்கத்தலைவர் கே. ஏகாம்பரம் தலைமையில் நடைபெறவுள்ளது.இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

மேலும் இந்நிகழ்வில் நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் பெண்களுக்கான போட்டியில் காங்கேசன் துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் எதிர் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக்கழகமும் ஆண்களுக்கான போட்டியில் காங்கேசன் துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் எதிர் ஆவரங்கால் மத்திய விளை யாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (4)

# இராசி பலன்

06-02-2010
(தை 24 , சனிக்கிழமை )
அட்டமி முன்னிரவு 11.36 மணிவரை
விசாகம் பின்னிரவு 5.57 மணிவரை
இராகுகாலம் 9.35-11.05 மணிவரை
சுபநேரம் 3.35-5.05 மணிவரை
திருநீலகண்டர் குருபூசை,
தாயுமான சுவாமிகள் குருபூசை.

| | |
|---|---|
| மேடம் | குடும்ப மகிழ்ச்சி, தடைப்பட்ட காரியம் கைகூடும், மனோ தைரியம், கீர்த்தி. |
| இடபம் | சுவாரஸ்யம், எடுத்தகாரியம் கைகூடும், போசன நன்மை, நண்பர்கள் உதவி. |
| மிதுனம் | கடினமுயற்சி, கௌரவக் குறை வு, மனக்கவலை, காரிய இடையூறு. |
| கடகம் | தன்னம்பிக்கைக் குறைவு சுப செலவு, வாகன சுகம், நண்பர்கள் சந்திப்பு. |
| சிங்கம் | மனமகிழ்ச்சி, எடுத்த காரியம் கைகூடும், தேகநலம், அந்நியர் சந்திப்பு. |
| கன்னி | போசன சுகக்குறைவு, வேலைச் சுமை, உடல் நலக்குறைவு, குடும்பக் கவலை. |
| துலாம் | நண்பர்கள் சந்திப்பு, காரிய சித்தி, தெளிந்த சிந்தை, போசன சுகம். |
| விருச்சிகம் | தொழில் நன்மை, பிரயாண நன்மை, சயனசுகக்குறைவு, முயற்சி தாமதம். |
| தனுசு | தெய்வசிந்தை, குடும்ப சுகம், தேகநலன், பெருமையடைதல். |
| மகரம் | அதிகாரம், நல்ல முயற்சி, பாராட்டு ,உஷ்ண நிலை. |
| கும்பம் | கட்டுப்படுதல், பிரயாணம், பிதா சிந்தை ,சரீரப் பிரயாசை. |
| மீனம் | எதிர்பாராத பகை, காரிய தடங்கல் , தனவிரயம், கௌரவக்குறைவு. |

வளவன்

# நினைவுதின கூட்டம்

(கொழும்பு)

இலங்கையின் பொதுவுடமை இயக்கத்தின் முன்னோடி தோழர் நா. சண்முகதாசனின் 17 ஆவது நினைவு தினக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு வெள்ளவத்தை தேசிய கலை, இலக்கியப் பேரவையின் தலைமைப் பணிமனையில் கைலாசபதி கேட்போர் கூட்டத்தில் நடைபெறவுள்ளது.

சி.சிவசேகரம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் புதிய ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் "ஜனாதிபதித் தேர்தல் முடிவும் நாடு எதிர் நோக்கும் சவால்களும்" எனும் கருப்பொருளில் உரையாற்றவுள்ளார்.

மேற்படி நினைவுக் கூட்டத்தை மார்க்சிச கற்கை நெறிகளுக்கான சண்முகதாசன் நிலையம் ஏற்பாடு செய்துள்ளது. (2-4)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 250 | 260 | 140 |
| தக்காளி | 130 | 140 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 40 |
| கோவா | 80 | 90 | 80 |
| கரட் | 120 | 130 | 120 |
| பூசணி | 30 | 40 | 30 |
| புடோல் | 80 | 90 | 60 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 90 | 100 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 80 |
| பாகற்காய் | 120 | 130 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 60 |
| கரணைக்கிழங்கு | 25 | 40 | 30 |
| பயிற்றங்காய் | 140 | 150 | 140 |
| லீக்ஸ் | 100 | 120 | 80 |
| பீற்றூட் | 80 | 100 | 100 |
| கறிமிளகாய் | 150 | 160 | 120 |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 150 | 160 | 120 |
| கத்தரி தம்புள்ள | 40 | 50 | 50 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 15 |
| தேசிக்காய் | 50 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 30 |



யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் இணையத்தள ஆரம்பநிகழ்வில் வித்தியாலய அதிபர் வி.மாணிக்கம் மங்கல விளக்கேற்றுவதையும், கழக அங்கத்தவரும் ஆங்கில ஆசிரியருமான பி.என்.சுதர்சன் வரவேற்புரை நிகழ்த்துவதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வுபெற்ற தபால் அதிபர் மு.சண்முகம், கணனி கற்கை மைய முகாமையாளர் நி.சரவணபவன் ஆகியோர் உரையாற்றுவதையும், பிரதம விருந்தினர் இணையத்தளத்தை ஆரம்பித்து வைப்பதையும் படங்களில் காணலாம்.

## புதிய மின்கம்பங்கள்

(வேலணை)

வேலணை வங்களாவடி சிற்பணை வீதியில் மின்விநியோகத்திற்காக நாட்டப்பட்டிருந்த மின் கம்பங்கள் அண்மைக் காலமாக மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் தற்போது இலங்கை மின்சார சபையின் ஏற்பாட்டில் குறித்த வீதியில் புதிய மின்கம்பங்கள் மாற்றம் செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-4)

## நாகபாம்புகளின் நடமாட்டத்தால் அச்சமடைந்துள்ள மக்கள்

(பொன்னாலை)

ஏழாலை மற்றும் அதை அண்டிய வயல் வெளிகளில் சிலநாட்களாக நாகபாம்புகளின் நடமாட்டம் வெகுவாக அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு நடமாடும் நாகபாம்புகள் அருகிலுள்ள குடியிருப்புப் பகுதிகளுக்குள் உட்புகுந்து வருவதால் மக்கள் பீதியடைந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாகபாம்புகள் ஆட்களைத் தீண்டக் கூடிய வாய்ப்புக்கள் இருப்பதால் மக்கள் நலனைக் கொண்டு அவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்படுகிறது. (2-49)

## ஆன்மீக ஒன்றுகூடலும் சாது சங்கமும்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியில் நடத்தப்படும் ஆன்மீக ஒன்று கூடலும் சாதுசங்கமும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு சமிதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இன்றைய வாழ்வில் ஆன்மீகம் என்ற விடயம் பற்றி விசேட ஆன்மீக உரையை தமிழ்நாட்டின் ஸ்ரீ சாரத பிரம்ம வித்யா கேந்திரா ஆச்சிரம சுவாமி வேதாந்தானந்தா நிகழ்த்தவுள்ளார். (2-4)




## வன்செயலால் பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கான பண உதவி

(யாழ்ப்பாணம்)

செரண்டிப் சிறுவர் இல்ல நிறுவனத்தின் அனுசரணையுடன் வன்செயலினால் தாய் அல்லது தந்தையை இழந்த சிறுவர்களுக்கான முதற்கட்ட பராமரிப்பு பணம் வழங்கும் நிகழ்வு அண்மையில் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நிறுவன தொடர்பாளர் ச.ஏகாம்பரநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் 16 வயதிற்குட்பட்ட 34 சிறார்களுக்கு பராமரிப்புப் பணம் வழங்கப்பட்டது. இதில் நிறுவனத் தலைவி திருமதி ரிஸ்ஸா செல்வரத்தினம், நிறுவன உதவியாளர் திருமதி கு.சந்திராதேவி நிறுவன ஆதர வாளரான வே. முத்துலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு நிறுவனம் தொடர்பான கொள்கை விளக்கவுரைகளை நிகழ்த்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (4-134)

## வீதி புனரமைக்க கோரிக்கை

(பொன்னாலை)

சுழிபுரம் -காளுவன் சந்தியிலிருந்து ஆரம்பித்து பாண்டவெட்டை மற்றும் வறுத்தோலை போன்ற பகுதிகளுக்குச் செல்லும் வீதி மிக மோசமாகச் சேதமடைந்துள்ளது.

இதனால் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி போன்ற பாடசாலைகளுக்குச் செல்லும் நூற்றுக்கணக்கான மாணவர்கள், விவசாயிகள், கடற்றொழிலாளர்கள் ஆலயத்துக்கு செல்வோர், பொதுமக்கள் என தினமும் ஆயிரக்கணக்கானோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பிரதான வீதிகளில் ஒன்றாகக் காணப்படும் இவ்வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இவ்வீதியின் முக்கியத்துவம் உணர்ந்து விரைவில் புனரமைக்குமாறு வலி.மேற்கு பிரதேசசபை மற்றும் பிரதேச செயலகத்திடம் பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தபோதும் இதுவரை புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (6-49)

## அரியாலை புங்கன்குளம் சந்தியில் திருடர்களின் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

அரியாலை புங்கன்குளம் சந்தியில் உள்ள கடையொன்றினை உடைத்து உட்புகுந்த திருடர்கள் பெறுமதியான பொருட்களை களவாடிச் சென்றுள்ளனர்.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக அப்பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் தெரிவிக்கையில்,

கடையின் உரிமையாளரும் அவரது மனைவியும் நேற்று முன்தினம் காலை வவுனியா சென்றுள்ளனர்.

அவர்கள் இல்லாத சமயத்தை பார்த்திருந்த திருடர்கள் இரவுவேளை தங்களது கைவரிசையை காட்டியுள்ளதாகத் தெரிவித்தார்.

இதேபோன்று பகல் வேளைகளிலும் நகைகளுடன் அப்பகுதியில் நடமாட அச்சமான சூழ்நிலை காணப்படுவதாகவும் மக்கள் நடமாட்டமற்ற வேளைகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

## குமுதினிப் படகுச் சேவை நேரமாற்ற அறிவித்தல்

நெடுந்தீவிலிருந்து குறிகட்டுவானுக்கு செல்லும் குமுதினிப் படகுச் சேவையில் இன்று தொடக்கம் நேர மாற்றங்களை மேற்கொள்ளவுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே கடந்த ஒரு மாதங்களாக திங்கள் முதல் வெள்ளி வரை ஒருநாளைக்கு இரண்டு தடவையாகவும் சனிக்கிழமைகளில் ஒரு தடவையாகவும் செவ்வாய்க்கிழமை விடுமுறை தினமாகவும் சேவை நடைபெற்று வருகின்றது.

ஆனால் இன்று தொடக்கம் நெடுந்தீவிலிருந்து குறிகட்டுவான் நோக்கி திங்கள் முதல் வெள்ளி வரை தினமும் 3 சேவைகள் இடம்பெறுவதுடன் சனிக்கிழமைகளில் ஒரு சேவையும் ஞாயிற்றுக்கிழமைகளில் சேவை இடம்பெறமாட்டாது எனவும் அதிகார சபையினர் மேலும் தெரிவித்துள்ளனர். (3-2)

## பூரணப்படுத்தப்படாத வீதிகளால் சிரமங்களை சந்திக்கும் பொதுமக்கள்

(காரைநகர்)

காரைநகர் மத்தி கிராமத்தில் பூரணப்படுத்தப்படாத வீதிகளால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது, காரைநகர் பிரதேசசபைக்குட்பட்ட வீதிகளில் காரை மத்தி கிராமத்தில் புனரமைக்கப்பட்டு வருகின்றன. இதனால் அவ் வீதிகளில் கற்கள் போடப்பட்டு பல மாதங்கள் ஆகியும் இன்னமும் மிகுதி வேலைகள் பூரணப்படுத்தப்படாதுள்ளன. பறிக்கப்பட்ட கற்கள் வீதிக்கு குறுக்கே இருப்பதால் பாதசாரிகள் பயணிக்க முடியாதுள்ளது.

கற்கள் அடுக்கப்பட்ட வீதிகள் முறையாக உருளை இடப்படாததினால் வாகனங்களின் ரயர்கள் சேதப்படுகின்றன. பாதசாரிகளும் காயங்களுக்குள்ளாகும் நிலைமை தொடர்கதையாகியுள்ளது.

இவ்வீதிகளின் புனரமைப்பு வேலைகளை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் எனத் தெரிவிக்கும் பொதுமக்கள் இது தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளனர். (2-246)

## மதர் ஸ்ரீலங்கா தொடர்பான கோட்ட, வலய மட்டப் போட்டிகள்

(அல்வாய்)

மதர் ஸ்ரீலங்கா தொடர்பான கோட்ட வலய மட்ட போட்டிகள் எதிர்வரும்10ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் பிரதிக்கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளுக்கான தொனிப்பொருள் நான்மாறினால் நாடு மாறும் என்பதாகும். இப்போட்டிகளுக்கு ஏற்கனவே விண்ணப்பித்த பாடசாலைகள் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. (4-19)

## யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படும் பனை , தென்னை மட்டைகள்

(வேலணை)

தற்போது வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி பகுதிகளிலிருந்து பனை மற்றும் தென்னை மட்டைகள் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படுகின்றன.

இவற்றை லான்மாஸ்ரர் வாகனத்தின் மூலமும் துவிச்சக்கரவண்டிகள் மூலமும் வியாபாரிகள் எடுத்துவந்து விற்பனை செய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் தீவகத்தில் பனை மட்டை ஒன்று 2 ரூபா 50 சதத்திற்கும் தென்னை மட்டை ஒன்று 1 ரூபா 50 சதத்திற்கும் விற்கப்படுவதாகவும் இதனால் இவற்றை யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வருவதற்கு பெரும் எண்ணிக்கையான வியாபாரிகள் தீவகத்திற்கு செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (2-4)

## வரி அனுமதிப் பத்திரம்

(பொன்னாலை)

வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் கடந்த 2009 ஆண்டுக்கான வரி அனுமதிப் பத்திரங்களை 4 ஆயிரத்து 288 பேர் பெற்றுள்ளனர்.

இன்னும் சுமார் ஆயிரம் பேர் இந்த அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளவில்லை எனவும் இப் பிரிவில் 6 ஆயிரத்து 200 வாகனங்களில் 7 வாகனங்கள் மட்டும் பாவிக்க முடியாத நிலையில் உள்ளதாகவும் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (2-49)

## மெய்வல்லுநர் போட்டிகள்

கரவெட்டி துன்னாலை மேற்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை வல்லிபுரம் விளையாட்டு மைதானத்தில் அதிபர் கி.குகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் கலந்து சிறப்பிக்க வுள்ளதுடன் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி பு.புஸ்பகுமாரி வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (2-4-19)

✠✠✠

(அல்வாய்)

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி அதிபர் இ.குட்டித்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை மின்சார சபையின் வடமாகாண பிரதிப் பொதுமுகாமையாளர் இ.முத்துரட்ணானந்தன் கலந்துகொண்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (2-4-19)

✠✠✠

(அல்வாய்)

சிதம்பராக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி அதிபர் திருமதி கே.நகுலேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்துகொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (2-4-19)

# இலங்கையின் பொருளாதாரத்தில் இந்தியாவின் தலையீடு

11

**இலங்கையில் இந்தியாவின் தலையீடு தொடர்பில் கண்டியில் இடம்பெற்ற பகிரங்க உரையில் டில்வின் சில்வாவினால் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவின் கருத்துக்கள் தொடராக பிரசுரமாகின்றது.**

எண்ணெய் வளம் இல்லாவிட்டாலோ, மின்சாரம் இல்லாவிட்டாலோ, எமது நாட்டின் நிலை என்னவாகும்? சிந்தித்துப் பாருங்கள். அனைத்துச் செயலிழுந்து விடும். சத்தம் நின்றுவிடும். மின்னொளி கிடைக்காமல் நாடு இருண்டு விடும். வாகனங்கள் ஓடாது. நாடு ஸ்தம்பித்துவிடும். எனவே இவைகள் இந்த யுகத்தின் இன்றியமையாத வளங்கள்.



நாம் பயன்படுத்தும் மின்சாரம் மற்றும் எண்ணெய் வளத்தின் உரிமை வெளி நாடொன்றுக்குச் செல்லுமானால், அவற்றில் 50% க்கும் அதிகமான ஏகபோகமொன்று வெளிநாடொன்றின் கையில் இருக்குமானால், எமது நாட்டின் பாதுகாப்புக்கு அது அச்சுறுத்தலாகும்.

இந்தியாவிலிருந்து 1000-1500 மெகாவோட் மின்சாரத்தைப் பெறுகின்றோம். ஏதாவது சந்தர்ப்பத்திலாவது இந்தியா Switch off செய்தால் என்ன நடக்கும். 1500 மெகாவோட் மின்சாரத்தினால் இயங்கும் அனைத்துமே நின்று விடும். 1500 மெகாவோட் மின்சாரத்தை ஒரே வாரத்துக்குள் உற்பத்தி செய்ய முடியுமா? முடியாது. ஒரு வருடத்தில்? அதுவும் முடியாது. நாம் என்ன செய்வது. இந்தியாவிடம் மண்டியிடவேண்டும். கெஞ்ச வேண்டும். அவர்கள் கேட்பதையெல்லாம் கொடுத்தாவது நாம் மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

இவற்றை கிஞ்சித்தும் கவனிக்காது, தொலைநோக்கின்றி ஆட்சியாளர்கள் இவ்வாறான ஒப்பந்தங்களைச் செய்கின்றனர்.

இந்த ஒப்பந்தத்தினால் ஏற்படும் பாதிப்புக்கள் கணக்கிடலங்காது. இந்தியா எமக்கு மின்சாரத்தை விற்கும் விடயத்தில் பல முரண்பாடுகள் இருக்கின்றன. சம்பூர் அனல் மின் நிலையம் தொடர்பான ஒப்பந்தத்தில் பல குளறுபடிகள் இருப்பதாகத் தெரியவருகின்றது. நாம் அதனைப் பார்க்கவில்லை. கேள்விப்படுகின்றோம்.

மின்சாரத்தை உற்பத்தி செய்வது இந்தியா, விநியோகிப்பது இந்தியா, பணம் அறவிடுவது இந்தியா. இது எமது மின்சார சபை சட்டத்தோடு மோதுகிறது. தற்போதைய மின்சாரசபை சட்டத்துக்கேற்ப தனியார்துறை மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். பிரச்சினையில்லை. இலங்கையில் எந்த இடத்தில் யார் மின்சாரத்தை உற்பத்தி செய்தாலும் மின்சார சபைக்கே அதனை விற்க வேண்டும். மின்சார சபை அதனை விலை கொடுத்துவாங்கி, மக்களுக்கு விநியோகிக்கிறது. ஆகவே விநியோகிக்கும் உரிமை மின்சார சபைக்கே இருக்கிறது. ஆனால் இந்தியாவுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கேற்ப விநியோகிக்கும் உரிமை, பணம் அறவிடும் உரிமை இந்தியாவுக்குக் கிடைக்கிறது. ஆகவே, இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தமும், மின்சார சபை சட்டமும் ஒன்றோடொன்று மோதுகின்றன.

எனவே இவற்றில் ஒன்றை மாற்றியாக வேண்டும். ஒப்பந்தத்தை மாற்றமுடியாது. எனவே, மின்சார சபையின் சட்டத்தை மாற்றியமைக்க முயற்சிகள் நடக்கின்றன. ஆகவே இந்த நாட்களில் மின்சார சபைக்குள் ஒரே குழப்பம். மின்சார சபையைத் துண்டாடுவதற்கான சட்டமூல ஏற்கனவே 8 ஆகப் பிரிப்பதற்கும், பின்னர் 3ஆகப் பிரிப்பதற்குமான சட்டமூலங்கள் கொண்டு வரப்பட்டன.

இந்த சட்டமூலம் பாராளுமன்றத்துக்கு ஏன் கொண்டு வரப்படுகிறது? மின்சார சபையின் ஏகபோகத்தை இரத்துச் செய்வது தான் இதன் நோக்கம். அதனை இல்லாதொழிக்காமல் இந்தியாவோடு செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை அமுல்ப்படுத்த முடியாது. ஆகையால், 2012 க்கு முன்னர் மின்சார சபையை ஒழித்துக் கட்டவேண்டும். முடியுமாயிருந்தால் ஒழித்துக் கட்டட்டும் பார்க்கலாம். இவர்களின் இந்த முயற்சியைத் தோற்கடித்து மின்சார சபையைப் பாதுகாப்போம்.

சம்பூர் மின்நிலையம் 500 மெகா வோட்டோடு ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இது இரண்டாவது பிரச்சினை. அது 1000 மெகாவோட்டாக அதிகரிக்கப்படும். இந்த மின்சாரத்திலிருந்து ஒரு பகுதியை இலங்கைக்குத் தருவதாக அந்த ஒப்பந்தம் கூறுகிறது. ஒரு பகுதியை இந்தியா எடுத்துச் செல்லும். இதை சிந்தித்துப் பாருங்கள். சம்பூரில் உற்பத்தியாகும் மின்சாரத்தில் ஒரு பகுதி இந்தியாவுக்கு எடுத்துச் செல்லப்படுவதோடு, அங்கிருந்து மீண்டும் ''கேபிள்'' ஊடாக




இங்கே மின்சாரம் எடுத்து வரப்படும். இது ஒரு கேலிக்கூத்தான விடயம். இங்கிருந்து அங்கு எடுத்துச் செல்லப்பட்டு மீண்டும் அங்கிருந்து இங்கு எடுத்து வரப்படுகிறது. இதுதான் இந்தியாவின் குள்ளநரித்தனம். இலங்கையின் மின்சக்தி ஏகபோகத்தை கைப்பற்றுவதே இந்தியாவின் நோக்கம். இதற்காகத்தான் இந்தியா திட்டமிட்டு செயல்படுகிறது. இந்தியா தனது நாட்டின் மின்சாரத் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்துவிட்டு எஞ்சியிருக்கும் மின்சாரத்தை விற்பதில் ஓரளவு நியாயமிருக்கிறது. எமது நாட்டைப் பொறுத்தவரையில் 80% வீடுகளுக்கு மின்சார வசதி இருக்கிறது. 20% வீடுகளுக்கு இந்த வசதி இல்லை.

இந்தியாவின் நிலை என்ன? இந்தியாவில் 67.9% வீடுகளுக்கே மின்சார வசதி இருக்கிறது. இலங்கையில் 80%, இந்தியாவில் 68% .80% மின்சார வசதியுள்ள எமக்கு 68% வசதியுள்ள இந்தியா மின்சாரத்தை விற்கிறது. தமது நாட்டில் 32% க்கு மின்சார வசதியில்லை. இந்த நிலையில் எமக்கு மின்சாரத்தை விற்க வருகிறது இந்தியா. ஏன் அவ்வாறு விற்கிறது? பணத்தை மாத்திரம் நோக்கமாகக் கொண்டல்ல. அரசியலை கருதி, ஆதிக்கத்தை கருதி. இது மோசமான செயல், அநீதி. நமது தன்னாதிக்கத்தையும், பொருளாதார ஆதிக்கத்தையும் ஒப்பந்தங்கள் மூலமாக இந்த அரசாங்கங்கள் காட்டிக் கொடுக்கின்றன. இது கடுமையாக சிந்திக்க வேண்டிய விடயம்.

அடுத்ததாக, எமது எண்ணெய் வளம். எண்ணெய் அகழ்விலிருந்து விநியோகம் வரை அனைத்தும் இந்தியாவின் கைக்கு கிடைக்கப்போகிறது. இலங்கைக்குச் சொந்தமாக விநியோக நிலையங்கள் 107 இருக்கின்றன. விநியோக நிலையங்கள் 100 I.O.C விலை கொடுத்து வாங்கியுள்ளது. இலங்கையின் எண்ணெய் விநியோகத்தில் 50% இந்தியப் பெற்றோல் கம்பனியிடம் உள்ளது. எமது பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்தே எண்ணெயைக் கொள்முதல் செய்யவேண்டுமென்ற நிபந்தனை ஒப்பந்தம் செய்யும்போது ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அந்த நிபந்தனை இரத்து செய்யப்பட்டு விட்டது. இப்போது இந்தியாவிலிருந்து அவர்களால் நேரடியாகவே பெற்றோல் வாங்க முடியும்.

அவர்கள், அவர்களது நாட்டிலிருந்து எண்ணெயை வரவழைத்து எமது நாட்டில் விநியோகிக்கின்றனர். திருமலை பெற்றோல் குதங்களில் சேமிக்கிறது. இதைத் தவிர திருமலையில் தாம் பெற்றுக் கொண்ட விசேட வர்த்தக வலயப் பிரதேசத்தில் பெற்றோல் சுத்திகரிப்பு நிலையமொன்றை அமைத்து வருகிறது. அந்த நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெயை I.O.C விநியோகிக்கத் தொடங்கியவுடன், எமது எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களை மூட வேண் டிய நிலை ஏற்படும்.

சுத்திகரிப்பின்போது குறிப்பிட்ட ளவு எண்ணெயைத்தான் சுத்தி கரிக்கமுடியும். கொள்ளளவொன்று இருக்கின்றது. அதற்குக் குறைவான எண்ணெயை சுத்திகரிக்கமுடியாது. அதன் பின்னர், எமது கூட்டுத்தாபனத்திடமிருந்து கிடைக்கும் எண்ணெயை பெற்றுக் கொள்ள வேண்டும். எண்ணெய் எங்கிருந்து கிடைக்கும்? இந்தியாவிடமிருந்து எண்ணெய் சுத்திகரிப்பின் ஏகபோகம் இந்தியாவின் கைக்குச் சென்று விடும். எண்ணெய் அகழ்வும் இந்தியாவின் கைக்குச் சென்று விடும். மின் வலுவும் இந்தியாவிடம் . இதனால் எமது நாட்டின் தன்னாதிக்கம்,



பாதுகாப்பு அனைத்துமே சவாலுக்குள்ளாகும்.

இன்னொரு முக்கியமான விடயம் என்னவென்றால், எண்ணெய் பரலொன்றின் விலை 140 ரூபாவாக, இருந்த போதுதான் எண்ணெய் விலை நிர்ணயிக்கப்பட்டது. இப்போது என்ன நடந்திருக்கிறது? எண்ணெய் விலை 89 டொலர் வரை குறைந்திருக்கின்றது. 89 டொலராகக் குறைந்திருக்கும் நிலையிலும் அரசாங்கம் எண்ணெய் விலையைக் குறைக்கவில்லை. தனது பொருளாதா்ர பலவீனங்களை மறைப்பதற்காகவும், செலவீனங்களை சரிசெய்து கொள்வதற்காகவும் அரசாங்கம் எண்ணெய் விலையைப் பயன்படுத்துகிறது. இது நாட்டு மக்கள் மத்தியில் எதிர்ப்பலையை ஏற்படுத்தியுள்ளது. எண்ணெய் விலையை அரசாங்கம் குறைக்காத நிலையில் இந்திய எண்ணெய்க் கம்பனி நாளொன்றுக்கு கோடிக்கணக்கான ரூபாய்களை மேலதிக இலாபமாகப் பெறுகிறது.

அரச வருமானத்தை அதி கரித்துக் கொள்வதற்காக, எண்ணெய் விலையைக் குறைக்காமல் கதையளந்து கொண்டிருக்கிறது . இதனால் அதிக பயனடைவது இந்திய I.O.C நிறுவனம் தான்.

அது மாத்திரமல்ல. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான பெற்றோல் நிரப்பு நிலையங்களை இந்திய I.O.C நிறுவனத்திடம் ஒப்படைக்கும்போதே இரண்டு சுத்திகரிப்பு நில்லையங்கள், களஞ்சிய சாலை விநியோகக் குழாய்கள் ஆகிய வற்றை ஒன்றிணைத்து Ceylon Petrolism Storage Turminal (CPSTL) என்ற பெயரில் ஒரு நிறுவனத்தை உருவாக்கி 1/3 பங்கு I.O.C க்கு விற்கப் பட்டது. மேலும் 1/3 பங்கை விற்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சி எமது (JVP) முயற்சியால் தடுக்கப்பட்டது.

**டில்வின் சில்வா**
பொதுச்செயலாளர், மக்கள் விடுதலை முன்னணி

இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்க்கும்போது, இந்தியாவுக்குச் சாதகமான செயல்களைச் செய்து, எண்ணெய் விநியோகத்தை முழுமையாக இந்தியாவிடம் கையளிக்க அரசாங்கம் முயற்சிக்கிறது. எமது தேசிய சொத்துக்களை இந்தியாவுக்கு தாரைவார்த்துள்ளோம். நாட்டை நேசிப்பவர்களாக இருப்பதால், இந்த மண்ணின் மைந்தர்களாக நாம் இருந்தால் இந்த அநியாயத்தை நாம் அங்கீகரிக்கலாமா? சில தேசாபிமான வேடதாரிகளுக்கு இது தெரிவதில்லை. மஹிந்தவின் தேசாபிமானத்தை பாதுகாப்பது மாத்திரமே அவர்களது வேலையாக இருக்கிறது. (தொடரும்)

# தொழிலதிபரின் மகள் கொடூரமாகக் கொலை

## அதிர்ச்சியில் தந்தை மரணம்



ஆந்திராவில் தொழில்போட்டி காரணமாக, பிரபல தொழிலதிபர் ஒருவரின் மகள், கடத்திக் கொலைசெய்யப்பட்டார். மகள் இறந்த அதிர்ச்சி காரணமாக தொழிலதிபரும் மாரடைப்பால் இறந்துள்ளார். இவ்வாறான வழக்குகளில் முறையான தீர்வு கிடைக்க வேண்டும் என்றால் பொலிஸாரின் கரங்கள் அரசியலால் கட்டப்படாமல் இருக்க வேண்டும் என பிரஜா ராஜ்யம் கட்சித் தலைவர் சிரஞ்சீவி தெரிவித்துள்ளார்.

ஆந்திரா, விஜயவாடாவைச் சேர்ந்த தொழிலதிபர் பிரபாகர் ராவ் என்பவரே இவரது 9 வயது மகள் நாகவைஷ்ணவி கொடூரமான முறையில் கொல்லப்பட்ட செய்தி கேட்டு மாரடைப்பில் மரணமாகியுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

மூன்று நாட்களுக்கு முன் வைஷ்ணவி இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டு காணாமல் போனது குறித்து பொலிஸாரிடம் புகார் தெரிவிக்கப்பட்டது. மகள் காணாமல் போனதால் அதிர்ச்சியடைந்த பிரபாகர் ராவ் சுகவீனமுற்றார். விஜயவாடாவில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை இரவு, அட்டோ நகர் என்றஇடத்தில் வைஷ்ணவியின் உடலை பொலிஸார் நீர் கொதிக்கவைக்கும் இயந்திரம் ஒன்றிலிருந்து பாதி எரிந்தநிலையில் மீட்டனர். இது பற்றிய செய்தி தொலைக்காட்சி வாயிலாக ஒளிபரப்பாகியது.

மருத்துவமனையில் இதைப் பார்த்த பிரபாகர் ராவ் அதிர்ச்சியில் மாரடைப்பு ஏற்பட்டு இறந்தார். இச்சம்பவம் குறித்த தடய அறிவியல் நிபுணர்கள் மற்றும் பொலிஸார் சம்பவம் நடந்த குண்டூரில் உள்ள இரும்பு உருக்கும்தொழிற்சாலையில்ஆய்வுநடத்தினர்.

அங்கு சிறுமியின் உடலை எரிக்க மின்சார நீர்கொதிக்க வைக்கும் இயந்திரத்தில் 1400 சென்டிகிரேட்வெப்பம் இரண்டு முறை பயன்படுத்தப்பட்டுள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இக்கொலைத் திட்டத்திற்கு முக்கிய காரணமாக இருந்தவர் பிரபாகரர் ராவின் மைத்துனர் வெங்கட்ரர்வ். இவர் தனது நண்பர் சீனிவசுராவ், மூலமாக ஐதராபாத்தைச் சேர்ந்த நான்கு பேரைக் கொண்டு செயற்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

பிரபாகர் ராவின் வாரிசுகளான சாய் தேஜா (வயது 12) மற்றும் நாகவைஷ்ணவி (வயது 9) ஆகியோரைக் கொன்றுவிட்டால் பிரபாகர் ராவ் சொத்துக்களை தாம் கைப்பற்றி விடலாம் என்ற வெங்கட்ராவின் பேராசை தான் இக்கொலைக்கு அடித்தளமாக அமைந்துவிட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பிரபாகர் ராவின் உடலுக்கு அமைச்சர் பிரசாத் ராவ், முன்னாள் முதல்வர் சந்திரபாபு நாயுடு, பிரஜா ராஜ்யம் கட்சித்தலைவர் சிரஞ்சீவி ஆகியோர் அஞ்சலி செலுத்தி அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். இக்கொலை சம்பவம் ஆந்திராவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (2-6)



மும்பை யாருக்குச் சொந்தம் என்ற விவகாரத்தில் ராகுல் பற்றி சிவசேனா தலைவர் பால் தாக்கரே விமர்சித்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து உத்தரப்பிரதேச மாநிலம் மொராதாபாத்தில் காங்கிரஸ் தொண்டர்கள் பால் தாக்கரேயின் படத்தை எரித்து தங்கள் எதிர்ப்பைக் காட்டினர்.

# மும்பைத் தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்டவர் ஓர் இந்தியர்

## ப.சிதம்பரம் திடுக்கிடும் தகவல்



(புதுடில்லி)

மும்பை தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதிகளை வழிநடத்தியவர், ஓர் இந்தியர் என்று மத்திய உள்துறை மந்திரி ப.சிதம்பரம் கூறினார்.

மேலும் அவர் கூறியதாவது,


மும்பை தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதிகளை வழிநடத்தியவர் ஓர் இந்தியர் என்று பல மாதங்களாக எங்களுக்கு தெரியும். ஆனால் அவரது உண்மையான அடையாளம் தெரியவில்லை. இந்தியர் என்றால் அவர் இந்திய குணாதிசயங்களை பெற்றவராக இருக்கலாம்.

இந்தியாவுக்குள் ஊடுருவி, நீண்டகாலமாக இங்கேயே தங்கி இருந்து இந்தி வார்த்தைகளை கற்றுக் கொண்டவராக இருக்கலாம் அல்லது இந்தியாவில் இருந்து வெளியேறி பாகிஸ்தானுக்கு சென்று அங்குள்ள தீவிரவாதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டவராகவும் இருக்கலாம்.

அவர் பெயர் அபு ஜிண்டால் என்று நாங்கள் கேள்விப்பட்டு இருக்கிறோம். ஆனால் அது அவரது உண்மையான பெயர் அல்ல. அவரது குரல் மாதிரி கிடைத்தால்தான் அவர் யார் என்று கண்டுபிடிக்க முடியும். ஆனால் குரல் மாதிரியை பாகிஸ்தான் அளிக்காது. அவராக இருக்கலாம், இவராக இருக்கலாம் என்று யூகங்கள் எழுப்பப்படுகின்றன. ஆனால் உள்துறை மந்திரியான நான் அது போல யூகங்களைச் சொல்ல முடியாது.

இவ்வாறு ப.சிதம்பரம் கூறினார்.

மேலும் மும்பை தாக்குதல் சம்பவத்துக்கு மூளையாக செயற்பட்டவர் அபு ஜிண்டால் என்று கருதப்படுகின்றது. அவரது உண்மையான பெயர்; சையது சபி யுதின் அன்சாரி. அவர் மராட்டிய மாநிலம் அவுரங்காபாத்தை சேர்ந்தவர். அவுராங்கா பாத் ஆயுத வழக்கிலும் குஜராத் மாநில முதல்-மந்திரி நரேந்திர மோடியை கொலை செய்ய சதித் திட்டம் தீட்டியே வழக்கிலும் அவர் தேடப்பட்டு வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(2-6)



தெலுங்கானா மாநிலம் அமைக்கக் கோரி ஐதராபாத் சார்மினார் பகுதியில் நடைபெற்ற மனித சங்கிலிப் போராட்டம்.

# பாரதச் செய்திகள்

# பேச்சுக்களை மீண்டும் தொடர இந்திய-பாகிஸ்தான் அரசுகள் விருப்பம்

(புதுடில்லி)

இந்தியாவின் மும்பை நகரில் கடந்த 2008ஆம் ஆண்டு தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து பாகிஸ்தானுடன் இடைநிறுத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளைத் தொடர இந்தியா திட்டமிட்டுள்ளது.

இரு நாடுகளின் வெளியுறவுச் செயலர் நிலையிலான பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க இந்தியாதிட்டமிட்டிருப்பதாக இந்திய வெளியுறவுச் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பயங்கரவாதம் உட்பட அனைத்துப் பிரச்சினைகள் குறித்தும் பாகிஸ்தானுடன் பேசப்படும் என இந்திய ஊடகங்களுக்கு மற்ற அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

பேச்சுவார்த்தை நடத்தப்படும் திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை. ஆனால் இந்தியா எதைப்பற்றிப் பேசத் தயாரக உள்ளது என்பது தொடர்பாக பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் விளக்கம் கேட்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

இது தொடர்பாக இந்தியாவின் சி.என்.என்.ஐ.பி.என் தொலைக்காட்சிக்கு பேட்டியளித்த பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஷா முகமத் குரேஷி, பேச்சுவார்த்தை தொடர்பான விபரங்கள் இந்தியாவிடமிருந்து கிடைத்தபிறகு, திகதி குறித்து முடிபு செய்யப்படும் என்றும், எல்லாப் பிரச்சினைகளையும் ஆக்கபூர்வமான வகையில் பேசித் தீர்த்துக் கொள்ள பாகிஸ்தான் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

காஷ்மீர் உட்பட இரு நாடுகளுக்கிடையிலான பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக கடந்த 6 ஆண்டுகளுக்கு முன்பு பேச்சுவார்த்தை தொடங்கியது. ஆனால், கடந்த 2008ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மும்பையில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து அந்தப் பேச்சுவார்த்தையை இந்தியா இடைநிறுத்தியது. பாகிஸ்தானில் இருந்து செயற்படும் தீவிரவாதிகள் தான் தாக்குதலை நடத்தியிருப்பதாகவும், அவர்கள் மீது பாகிஸ்தான் நடவடிக்கை எடுக்கும் வரை பேச்சுவார்த்தை கிடையாது என்றும் இந்தியா கூறிவந்தது.

இன்னும் இரு நாடுகளுக்கிடையே பரஸ்பர நம்பகத்தன்மை ஏற்படாவிட்டாலும், பேச்சுவார்த்தையை மீண்டும் தொடவேண்டும் என்ற விருப்பம், இரு அரசுகளிட்மும் இருப்பதாகக் கருதப்படுகிறது. (2-6)

# இந்திய கடலோர காவற்படையினரால் பதினைந்து இலங்கை மீனவர்கள் கைது

(சென்னை)

இந்திய கடலோர காவல் படையின் கப்பலான ரேனிஜிந்தன் கப்பல் இந்திய கடல் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் ரோந்து பண்ணியில்ஈடுபட்டிருந்தது. அப்போது இலங்கை மீனவர்கள் சிலர் இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து வருவதாக சில தகவல்கள் கிடைத்துள்ளன.

விசாரணையில் சென்னையில் இருந்து 126 கடல் மைல் தொலைவில் இலங்கை மீனவர்கள் மீன் பிடித்தது தெரியவந்தது.

அதைத் தொடர்ந்து அங்கு விரைந்து சென்ற கடலோர பாதுகாப்பு படையினர் இந்திய கடல் எல்லைக்குள் 3 படகுகளில் அத்துமீறி மீன் பிடித்து கொண்டிருந்த 15 இலங்கை மீனவர்களை சுற்றி வளைத்தனர்.

அவர்கள் கைது செய்யப்பட்டதுடன் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும் படகில் இருந்த 5 தொன் எடையுள்ள மீன்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் சென்னை காசிமேடு மீன்பிடித் துறைமுகத்திற்கு கொண்டுவரப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (2-6)

## வெளிநாடு சென்று நாடு திரும்புவோர் பற்றி தகவல்கள் பதிவு

(கொழும்பு)

வெளிநாடுகளில் பணி புரிந்து நாடு திரும்பும் நபர்கள் தொடர்பில் பதிவுகள் மேற் கொள்ளப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

வேலைவாய்ப்புப்பெற்று வெளிநாடுசென்று நாடு திரும்புவோரின் தரவுகள் பதி யப்பட உள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் பெலவத்த பத்திரமுல்ல மற்றும் பிராந்திய அலுவலகங்களில் இந்த பதிவு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

நாடு திரும்புவோரின் நலனைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (2-6)

# எஸ்.பி.திஸாநாயக்கவிற்கு பூரண பொதுமன்னிப்பு; உடுநுவர தொகுதி அமைப்பாளராகவும் நியமனம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் முக்கிய தலைவர்களில் ஒருவரான எஸ்.பி. திஸாநாயக்கவிற்கு, ஜனாதிபதியினால் பூரண பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுதந்திர தினமான நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் பூரண பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உடுநுவர தேர்தல் தொகுதி அமைப்பாளராகவும் எஸ்.பி. திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி இந்த பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உயர் நீதிமன்றத்தை அவதூறு செய்த குற்றத்திற்காக எஸ்.பி.திஸாநாயக்கவிற்கு இரண்டு ஆண்டுகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன், ஏழு ஆண்டு காலம் சிவில் உரிமை மறுக்கப்பட்டது.



மேலும் எஸ்.பி. திஸாநாயக்க ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் 'எதிர் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

# பொதுத் தேர்தலில் கலைஞர்கள் போட்டியிடத் திட்டம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் முக்கிய கலைஞர்கள் போட்டியிடத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜெக்சன் அந்தனி , மாலினி பொன்சேகா,கீதா குமாரசிங்க போன்றவர்கள் இதில் முக்கிய இடத்தை வகிக்கின்றனர்.

குறித்த மூன்று கலைஞர்களும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடக் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஜெக்சன், அந்தனி, கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட உத்தேசித்துள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

தமது இலட்சியம் என்ன என்பது குறித்து நாட்டு மக்கள் விரைவில் அறிந்துகொள்வார்கள் என ஜெக்சன் அந்தனி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தாம் ஏற்கனவே ஜனாதிபதித் தேர்தலின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவளித்ததாகவும், எதிர்வரும் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ளதாகவும் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

மற்றுமொரு சிரேஷ்ட நடிகையான மாலினிபொன்சேகாவும் தேர்தலில் போட்டியிடக் கூடும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, பிரபல நடிகர் ரஞ்சன் ராமநாயக்க கம்பஹா அல்லது இரத்தினபுரி மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (6)

# 100 பொலிஸ் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்

(கொழும்பு)

எதிர்வரும் நாட்களில் 100 பொலிஸ் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அரசியல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரிலேயே இந்த இடமாற்றங்கள் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு பிரதிப்பொலிஸ் மா அதிபர்களும் இவ்வாறு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் உயர் அதிகாரிகளின் உத்தரவுகளையும் உதாசீனம் செய்துள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை முன்னாள் இராணுவக் கப்டன் ஒருவரை கைதுசெய்யுமாறு இரகசிய பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு விடுவிக்கப்பட்ட உத்தரவினை குறித்த அதிகாரி நிறைவேற்றத் தவறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

# எதிரணிக்கு ஆதரவு வழங்கியவர்கள் மீது அழுத்தங்களை ஏற்படுத்த அரசு திட்டம்

## ரவி கருணாநாயக்க



(கொழும்பு)

அரச திணைக்களங்களின் தலைவர்களை பதவி விலகுமாறு அரசு உத்தரவிட்டுள்ளதானது, ஜெனரல் பொன்சேகாவை ஆதரித்தவர்களைத் தண்டிக்கும் செயலாகும் என ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அரச திணைக்களங்களின் தலைவர்களை பதவி விலகுமாறு அரசு உத்தரவிட்டுள்ளது சந்தேகங்களை தோற்றுவித்துள்ளது.

ஜெனரல் பொன்சேகாவை ஆதரித்தவர்களை அரசு திட்ட மிட்டு பழிவாங்க முனைகின்றது. எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவு வழங்குபவர்கள் மீதான அழுத்தங்களை ஏற்படுத்துவதற்கு அரசு இந்த அரசியல் நகர்வை மேற்கொண்டுள்ளது.

தேர்தல் நடைபெற்ற முறையை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது .தேர்தலின் பின்னர் நடைபெற்ற நிகழ்வுகளையும் நாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே அரச திணைக்களங்களின் தலைவர்கள் அனைவரும் பதவி விலக வேண்டும் என அரசு உத்தரவிட்டுள்ளதாக அரச தலைவரின் செயலாளர் லலித் வீரதுங்க நேற்று முன்தினம் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (2-6)

# த.தே.கூ., ஜே.வி.பி.யின் ஆதரவுடன் ஆட்சியமைக்க முயற்சிப்போம்

## ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் பின்னர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகியவற்றின் ஆதரவுடன் ஆட்சியமைக்க முயற்சிகளை எடுப் போம் என்று ஐக்கிய தேசிய கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் தயாசிறி ஜய சேகர தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் இது தொடர்பில்மேலும்கூறியதாவது,

நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தல் ஊடாக மக்கள் கோரி நிற்கின்ற மாற்றத்தை பெற்றுக் கொடுக்க ஐக்கிய தேசிய முன்னணி யானைச் சின்னத்தில் போட்டியிடும். எமது கட்சியின் செயற்குழு இதனை உறுதி செய்துள்ளது.

சிங்கள தமிழ் மற்றும் முஸ்லிம் என அனைத்து இன மக்களையும் அரவணைத்துச் செல்லும் கட்சியாக ஐக்கிய தேசிய முன்னணி உள்ளது. அனைத்து மக்களினதும் உரிமைகளுக்காகவும் நாங்கள் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றோம்.

அந்த வகையில் இந்த தேர்தலில் அனைத்து மக்களையும் இணைத்துக் கொண்டு களமிறங்குவோம். எதிர்வரும் பாராளுமன்ற தேர்தல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. ஏனெனில் இந்த தேர்தல் மூலமாவது நாங்கள் மக்களுக்கு மாற்றத்தை பெற்றுக் கொடுக்க வேண் டியுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சிக்கு பாரிய மக்கள் ஆதரவு காணப்படுகின்றது. அந்த வகையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் மக்கள் விடு தலை முன்னணி ஆகியவற்றின் ஆதரவுடன் பொதுத் தேர்தலின் பின்னர் ஆட்சி அமைக்க முடியும் என்று நம்புகின்றோம். (2-6)

# புலனாய்வுப் பிரிவு அதிகாரிக்கு நீதிமன்றம் கடும் எச்சரிக்கை

(கொழும்பு)

புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவருக்கு கல்கிஸ்ஸ நீதிமன்றம் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தனிப்பட்ட நபர்களின் குற்றச்சாட்டுக்களை மட்டும் அடிப்படையாகக்கொண்டு விசாரணைகளின்றி எவரையும் கைது செய்யக் கூடாது என நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக உரியமுறையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

4.8 மில்லியன் சர்வோதய நிதி மோசடி குறித்த விசாரணைகளின் போது நீதவான் ஹர்ஷ சேதுங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.


குறித்த சம்பவம் தொடர்பில் புலனாய்வு அதிகாரி சரியான நடைமுறைகளைப் பின்பற்றவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

நபர் ஒருவர் வழங்கிய தகவலை மட்டும் கருத்திற்கொண்டு பௌத்த பிக்கு ஒருவரையும், பெண் ஒருவரையும் புலனாய்வுப் பிரிவு அதிகாரி கைது செய்திருந்தார்.

எனினும், இவ்வாறான கைதுகள் கண்டிக்கப்பட்ட வேண்டியவை எனக் குறிப்பிட்ட நீதவான் , தவறான நபர்களை கைதுசெய்யக் கூடாது எனவும், எதிர்காலத்தில் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (6)

# ஈழத்தமிழர் பிரச்சினையை தீர்க்க மேற்குலகம் முன் வரவேண்டும்

## டாக்டர் ராமதாஸ் தெரிவிப்பு



(சென்னை)

ஈழத்தமிழ் மக்களுக்கு ஆதரவாக இந்திய மத்திய அரசும் தமிழக அரசும் செயற்படப்போவதில்லை. எனவே ஈழத் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளை மேற்குலகம் தலையிட்டு தீர்த்துவைக்க வேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் எஸ்.ராமதாஸ் தெரிவித்துள்ளார்.


நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது ,

இலங்கையில் துன்பப்படும் ஈழத்தமிழ் மக்களுக்கு ஆதரவாக இந்திய மத்திய அரசோ அல்லது தமிழக அரசோ செயற்படப்போவதில்லை. அவர்கள் ஈழத்தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளை தீர்க்கப்போவதில்லை.

எனவே ஐக்கிய நாடுகள் சபை அமெரிக்கா, கனடா போன்ற மேற்குலக நாடுகள் ஈழத்தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முன்வரவேண்டும். அது தொடர்பாக அவர்கள் இலங்கை அரசுடன் பேச்சுக்களை மேற்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

# செங்கல்பட்டு முகாமில் இலங்கை அகதிகள் தாக்கப்பட்டமையால் எழுந்த உணர்வலைகள்

## ஆறரைக்கோடி தமிழர் வாழும் தேசத்தில் ஈழத் தமிழருக்கு ஏன் இந்த நிலை?



செங்கல்பட்டு சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழ் அகதிகள் மீது காவல்துறை நடத்திய தாக்குதலிற்கு கண்டனம் தெரிவித்துள்ள சீமான் அகதிகளை தமிழக அரசு உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து நாம் தமிழர் இயக்கத் தலைவர் சீமான் விடுத்துள்ள அறிக்கையில்,

தமிழ் நாட்டின் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள செங்கல்பட்டு அகதிகள் முகாமில் 60க்கும் மேற்பட்ட ஈழத் தமிழர்கள் புதன் கிழமை தம்மை உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி உண்ணாவிரதம் இருந்தனர். கடந்த 3 வருடங்களுக்கும் மேலாக இவர்கள் முகாமில் வைக்கப்பட்டுள்ளனர். விடுதலைப்புலிகளுக்கு பொருட்களை கடத்த முயன்ற குற்றச்சாட்டின் பேரில் கியூ பிரிவினரால் இவர்கள் கைது செய்யப்பட்டவர்களாவர்.

புதன்கிழமையுடன் 20 ஆவது தடவையாக உண்ணாவிரதம் மேற்கொண்டனர். இந்த முறை காலவரையற்ற உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அவர்கள் தெரிவித்து அதன்படி உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர்.

செங்கல்பட்டு அகதிகள் முகாம்களில் உள்ளோர் தொடர்பான பெரும்பாலான வழக்குகளில் காவல்துறை எந்தவொரு குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யவில்லை. அத்துடன் வழக்குகளை கொண்டு செல்வதற்கும் அவர்கள் முயற்சிகளை மேற்கொள்ளவில்லை.

பெரும்பாலோனோர் முகாமில் 5 வருடங்களுக்கும் மேலாக இருந்து வருகின்றார்கள், சிலரின் வழக்குகள் முடிவடைந்துவிட்டன. ஆனால் திறந்த முகாமில் இருக்கும் அவர்களின் உறவினர்களிடம் இணைந்து கொள்வதற்கு கூட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. வெளிநாடுக்கு போகக்கூட அனுமதிக்கப்படவில்லை. இலங்கையில் தமிழர்களுக்கு முகாம்கள் அமைக்கப்பட்டு சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டு உள்ளனர்.

அதேபோன்று செங்கல்பட்டு முகாமிலும் கொடுமை நடை பெறுகின்றது. முகாம்களில் இருப்பர்களில் அநேகமானோர் நோயால் பீடிக் கப்பட்டுள்ளனர்.

சிங்கள ஏகா திபத்தியின் முள் வேலி முகாம் களை விட அதீத கட்டுப்பாட்டுடன் இங்கு எம் சக தமிழன் தீவிர வாதியாய்ச் சித்தரிக்கப்பட்டு அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்ட நிலையில் வாழ்வது இங்குள்ள தமிழன் ஒவ்வொருவனுக்கும் பெருத்த அவமானம் ஆகும். தமிழன் உல கின் எல்லா மூலைகளிலும் அடிபட்டான். கடை சியாய் ஆறரைக் கோடி தமிழர்கள் வாழும் தமிழர் தேசத்திலும் இந்த அவலம்.

இந்த நிலையில் தமிழக அரசு தம்மை விடுதலை செய்ய வேண்டும் என்னும் நியாயமான கோரிக்கையை வலியுறுத்தி உண்ணாநிலை இருந்த எம் இரத்த உறவுகள் மீது காவல்துறை மிருகத்தனமாகத் தாக்கியதை வன்மையாக கண்டிக்கின்றேன். தமிழக அரசு உடனடியாக எம் அனைத்து தமிழ்ச் சொந்தங்களையும் விடுதலை செய்ய வேண்டுமாயும் அவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டுமாயும் நாம் தமிழர் இயக் கத்தின் சார்பில் கேட்டுக்கொள்கின்றோன் என்று சீமான் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## செங்கல்பட்டு சம்பவத்துக்கு வை.கோபால்சாமி கண்டனம்



செங்கல்பட்டு சிறப்பு முகாமில் ஈழத் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்திய காவல் துறையின்ரின் செயல் கடும் கண்டனத்துக் குரியது என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ தெரிவித்துள்ளார்.

இது குறித்து வியாழக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில்,

செங்கல்பட்டு சிறப்பு முகா மில் பல்வேறு வழக்குகளின் கீழ் 33 ஈழத்த மிழர்கள் சிறையில் உள்ள னர். பொய் வழக் குகளில் இருந்து தங்களை விடுவிக்கக்கோரி அவர்கள் உண் ணாவிரதம் இருந்து வருகின்றனர். இது போன்று பல முறை அவர்கள் போராட்டம் நடத்தியுள்ளனர்.

உண்ணாவிரதத்தை கைவிடவில்லை என்பதற்காக புதன்கிழமை நள்ளிரவு பொலிஸார் உள்ளே புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளனர். அதில் பத்மராஜா, கிருஷ்ணநீதன், முகம்மது ரிஸ்வான், அமலன், ஜெயமோகன், அருள், முத்து, கங்காதரன், பரமேஸ்வரன், சேகர், பகீரதன், செல்வகுமார், ரமணன், பிரதீபன், பாரதிதாசன் ஆகியோர் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீது பல்வேறு பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து செங்கல்பட்டு முகாமில் இருந்து அப்புறப்படுத்தியுள்ளனர். கடுமையான காயம் அடைந்த அவர்களை புழல் சிறையில் அடைக்காமல் வேலூர் சிறையில் அடைத்துள்ளனர். அண்ணாவின் நினைவு நாளன்று ஈவுஇரக்கமற்ற இந்த தாக்குதலை தமிழக காவல்துறை நடத்தியுள்ளது.

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படும் ஈழத் தமிழர்களை பொய் வழக்குகளில் இருந்தும் சிறையிலிருந்தும் விடுதலை செய்ய வேண்டும் என்று வை.கோ கேட்டுக்கொண்டுள்ளார்.(2-6)

## ஈழ அகதிகளுக்காக சட்டக் கல்லூரியின் மாணவர்கள் ஆர்ப்பாட்டம்



செங்கல்பட்டு சிறப்பு முகாமில் உள்ள ஈழ அகதிகள்ள உடனடியாக திறந்தவெளி முகாமிற்கு மாற்றக்கோரி செங்கல்பட்டு அம்பேத்கர் அரசு சட்டக்கல்லூரி மாணவர்கள் கண்டனஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அங்குள்ள சிறப்பு முகாமில் உள்ள ஈழ அகதிகள் உடனடியாக திறந்த வெளி முகாமிற்கு மாற்றப்படவேண்டும். அவர்கள் மீதான வழக்குகளின் குற்றப்பத்திரிகையை உடனடியாக தாக்கல் செய்ய வேண்டும்.

மேலும் அவர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு முறை நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதோடு சட்டக்கல்லூரி மாணவர்களுக்கு தேவையான அடிப்படைவசதியானபேருந்துவசதி,விளையாட்டு மைதானம், தாழ்த் தப்பட்ட மாணவ மாணவியருக்குவழங்கப்படும் சிறப்பு உதவி தொகையை நிபந்தனை யின்றி வழங்கவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து கண்டன ஆர்ப் பாட்டத் தில் ஈடுபட்டனர். ( 2-6)



செங்கல்பட்டு அகதிகள் முகாமிற்குள் புகுந்து பொலிஸார் தாக்கியதை அடுத்து மரத்தில் ஏறி போராட்டம் நடத்திய ஈழத்தமிழ் அகதிகள்

## ஈழத்தமிழ் அகதிகள் மீது தாக்குதல் விசாரணை நடத்தக் கோரி வழக்கு


செங்கற்பட்டு சிறப்பு முகாமிற்குள் புகுந்து கடந்த 2 ஆம் திகதி இரவு காவல் துறையினர் நடத்திய காட்டுமிரண்டித் தாக்குதல் குறித்து சுதந்திர விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும் என்று கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

வேலூர் சிறைச்சாலைக்குச் சென்று ஈழத்தமிழ் அகதிகளை சந்தித்து அவர்களின் காயங்களைப் பார்த்த வழக்கறிஞர் பா. புகழேந்தி, அவர்களின் காயம் குறித்த தகவல்களை நேற்று மாலை சென்னையில் தமிழினப் பாதுகாப்புப் போராட்டக் குழு நடத்திய கண்டன ஆர்ப்பாட்டத்தில் வெளியிட்டார்.

இந்த நிலையில் ஈழத்தமிழ் அகதிகள் மீது காவல் துறையினர் நடத்திய தாக்குதல் குறித்து சுதந்திர விசாரணை நடத்த உத்தர விட வேண்டும் என்று கோரி சிறைக்கைதிகள் உரிமை மையத்தின் சார்பாக இயக்குனர் புகழேந்தி சென்னை உயர் நீதிமன்றத்தில் ஒரு ரிட் மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

# குடியேற்ற வாதம் முதல் காபன் குடியேற்ற வாதம் வரை

(நேற்றைய தொடர்ச்சி...)



காலநிலை மாற்றத்தினால் மழை வீழ்ச்சியினதும் பனி வீழ்ச்சியினதும் முறைமைகள் 1900 தொடக்கம் 2005க்கு இடையில் மாற்றம் அடைந்துள்ளது. வட தென் அமெரிக்கா,வட ஐரோப்பா , மத்திய ஆசியா ஆகிய பிரதேசங்களில் இவற்றின் போக்கு மாற்றமடைந்துள்ளதாக (IPCC)கூறுகின்றது.

மேற்கு நாடுகளும் கைத்தொழில் மயமாகி வரும் நாடுகளும் புவித்தாய்க்கு காபன்டி ஒக்சைட் வாயுவினால் எழுதிவரும் மரண ஓலையினை எதிர்க்கும் வல்லமை அற்ற மூன்றாம் உலக வறிய பொருளாதாரங்களே. பெரிதும் பாதிப்படைந்து வருகின்றன. புவியினை காபன் மயமாக்கும் காபன் குடியேற்றவாதம் மூன்றாம் மண்டல நாடுகளையே அதிகம் பாதித்துள்ளது. புவி வெப்பமடைதலை தடுப்பதன் மூலம் எதிர்காலத்தில் புவியினை காப்பாற்றக்கூடிய வாய்ப்புள்ளது. புவி வெப்பமடைவதைத் தடுக்க வேண்டின் காபன் வெளியேற்ற அளவினை குறைக்க வேண்டும். சூட்டினைக் குறைப்பதற்கான வழியானது சூடான விடயப் பொருளாக வளர்ந்த நாடுகளிடையேயும் வளரும் பொருளாதாரங்கள் இடையேயும் (Emerging Economics)இது மாறியுள்ளது.

**கியூடோ ஒப்பந்தமும் கொப்பனேகன் உச்சி மாநாடும்**

புவி வெப்பமடைவதைக் கட்டுப்படுத்துவதற்கு கைத்தொழில் நாடுகளால் வெளியேற்றப்படும் காபனின் அளவினைக் குறைத்தல் வேண்டும். காபன் மூலம் உலகினை மாசுபடுத்தும் நடவடிக்கைகளில் மேற்குலகம் முன்னணியில் நின்ற போதும் வரிசைக் கிரமத்தில் மாசுபடுத்தல் ஒழுங்கில் ஐக்கிய அமெரிக்கா ,சீனா ,இந்தோனோசியா என்ற ஒழுங்கிலே இவை காணப்படுகின்றன. தற்போதைய வெப்பநிலை அதிகரிப்பான 2 பாகை செல்சியஸ் நிலையிலாயினும் வெப்பநிலையை கட்டுப்பாட்டினுள் வைத்திருப்பதாயின் காபன் வெளியேற்ற அளவினை 25%-40% குறைத்தால் மட்டுமே சாத்தியப்படும். அதற்கப்பால் வளர்ந்துவரும் வறிய நாடுகளும் காபன் அளவினை குறைத்துக்கொள்ளக் கேட்கப்படுகின்றன. இதில் சீனா ,இந்தியா, பிரேசில் போன்ற பல வளர்ந்துவரும் பொருளாதாரங்கள் அடங்குகின்றன. இதற்கப்பால் குறைவிருத்திப் பொருளாதாரங்கள் அபிவிருத்தி அடையவேண்டியுள்ளது. ஆனால் அவர்களும் காபன் அளவினை குறைத்துக் கொள்ள கேட்கப்படுகின்றன. 2020 குறைவிருத்திப் பொருளாதாரங்கள் காபனைக் குறைப்பதனால் வரும் பொருளாதார நட்டங்களை ஈடு செய்ய 100 பில்லியன் டொலர் நிதியுதவி அல்லது காபன் குடியேற்றவாத உதவி வழங்கப்படும் என கொப்பனேகன் மாநாடு கூறியுள்ளது.

புவி வெப்பமடைதலை தடுப்பதற்கு காபனின் அளவினை எந்தளவால் குறைப்பது, எப்படி அவர்களின் பொருளாதார வளர்ச்சியினை பாதிக்காத வகையில் குறைப்பது என்பது குறித்து இப் புவியினை தமது காபன் வெளியேற்றத்தினால் மாசுபடுத்தி புவியினை தமது காலனித்துவ கோளமாக கருதும் காபனை வெளியிடும் முன்னணி நாடுகளிடையே ஒத்த கருத்தும் உடன்பாடும் இல்லை. ஆளுக்கு ஆள் நழுவில்போகும் நிறுதிட்டமான ஒத்துழைப்பும் உடன்பாடும் இல்லாத நிலையே காணப்படுகின்றது. அத்துடன் காபனை வெளியேற்றுதல் முன்னணி நாடுகளின் விரிசையில் புதிதாக வளர்ந்து வரும் பொருளாதாரங்களை சீனா,இந்தியா, இந்தோனேசியா, பிறேசில் போன்ற நாடுகளும் இடம் பெற்றுள்ளன.

ஏற்கனவே காபனை போதியளவு வெளியேற்றும் கைத்தொழில் மய நாடுகள் இடையே போட்டியும் ஒத்த தன்மையும் காணப்படாத நிலையில் புதிதாக கைத்தொழிலில் வளர்ந்து வரும் பொருளாதாரங்கள் காபன் வெளியேற்றத்தினை குறைப்பதில் வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களுடன் முரண்பட்டு நிற்கின்றன. அவைகளும் ஐக்கிய நாடுகள் சபையும் கூறும் மட்டத்திற்கு காபன் வெளியேற்றத்தினை குறைத்தால் தமது பொருளாதார அபிவிருத்தி தடைப்படும் என வாதிடுகின்றன.

இதனைவிட மூன்றாவது வகையினர் பிரச்சினை ஒன்றும்காபன் வெளியேற்றத்தினை கட்டுப்படுத்துவது குறித்தும் காணப்படுகின்றது. அதாவது வளர்ந்து வரும் வளர்முகப் பொருளாதாரங்கள் அல்லது முன்னாள் காலனித்துவ பொருளாதாரங்களும் காபன் வெளியேற்றும் அளவினை மட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என வளர்ந்த கைத்தொழில் பொருளாதாரங்களால் நிர்ப்பந்திக்கப்படுகின்றன.

மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதைபோல் வளரவேண்டிய நிலையிலுள்ள வறிய பொருளாதாரங்கள் அவையும் தமது காட்ழிப்பு, காபன் வாயு வெளியேற்ற கைத்தொழில் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த வேண்டும் எனவும் அதனை மேற்கொள்பவர்களுக்கு நிதி உதவி அளிக்கப்படும் என்ற காலனித்துவ் வாதத் சிந்தனையை காபன் ஊடாக வேண்டி நிற்கின்றன.

இந்நாடுகளில் 2.8 பில்லியன் மக்கள் நாளொன்றிற்கு 2 டொலருக்கும் குறைவான வருமானத்தினைப் பெறும் வறிய மக்கள் உலக காபன் வெளியேற்றத்தில் 1/4 பங்கினை



பனியினால் மூடப்பட்ட ஆபிரிக்கக் கண்டத்தில் நிற்கும் சிறுவன் ஒருவன் மாதிரிக் கோளத்தில் ஆபிரிக்காவினைக் காட்டுகிறான்.

வகிக்கும் ஐக்கிய அமெரிக்கா மூன்றாம் மண்டல நாடுகளை எதிர்காலத்தினை தியாகம் செய்யும் படி வேண்டி நிற்கிறது.

1997இல் யப்பானின் கியூடோ நகரில் நடைபெற்ற காபன் வெளியேற்றத்தினை கட்டுப்படுத்தும் கியூடா புரட்டகோல் (Kyoto Protocol) இல் பல கைத்தொழில் நாடுகள் ஒப்பந்தம் இட்டன.

இதில் மொத்தமாக அன்றைய நிலையில் 5.2% என்ற அளவில் ($Co_2$) வினை குறைப்பதாகவும் 1990 களில் புவியில் இருந்த காபன் அளவுக்கு குறைப்பதெனவும் இது 2008-2012க்கு இடையில் நிறைவு பெற எல்லை ஒன்றினையும் எற்றுக் கொண்டன.

ஆனால் இது ஒரு சட்ட வலுவுள்ள ஆவணமாக காணப்படாமையாலும இதில் ஒப்பந்தமிட்டவர்களில் ஐக்கிய அமெரிக்கா ஒப்பந்தத்தில் கையெழுத்திடாமலும் இருந்தமையினால் கியூடோ ஒப்பந்தம் கூறிய படி நாடுகள் காபன் வெளியேற்றத்தினை கட்டுப்படுத்தவில்லை. அத்துடன் கியூடோ ஒப்பந்த காலத்தில் அதில் கலந்து கொள்ள அன்றைய நிலையில் அவசியமில்லாத இந்தோனேசியா இன்று அமெரிக்கா, சீனாவுக்கு அடுத்ததாக காபனை வெளியேற்றுவதில் 3ஆவது இடத்தில் இந்நாடு வந்துள்ளது.

இந்நாட்டினை கியூடோ ஒப்பந்தம் இதனால் கட்டுப்படுத்தாது. அத்துடன் கியூடோ ஒப்பந்தமும் முழுமையாக அமுலாகா நிலையில் 2012இல் அதன் காலமும் காலாவதியாகிப் போகவுள்ளது. மேலும் இன்றுள்ள நிலையில் பல புதிய கைத்தொழில் நாடுகளின் எழுச்சி, எழுச்சியடைந்த வரும் கைத்தொழில் பொருளாதாரங்கள் என்பவற்றினால் கியூடோ ஒப்பந்தத்திற்கு மேலான பல புதிய பிரச்சினைகள் காபன் வெளியேற்றம் பற்றி எழுந்துள்ளது. இன்றுள்ள நிலையில் குறைந்தது 49% ஆயினும் 2020 ஆம் ஆண்டுக்கிடையில் ($Co_2$)வின் அளவினை குறைக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

கியூடோ ஒப்பந்தம் படி கீழ்வரும் வாயுக்கள் குறிப்பாக மனித நடவடிக்கையினால் பூமியின் வெப்பத்தினை அதிகரிப்பதில் பங்கு வகிக்கின்றன எனக் கூறியுள்ளது.

Carbon dioxide, Methane, Nitrous Oxidev ($N_2o$), Hydro-Fluoro Carbons ($HFC_3$),Per- Fluoro Carbons ($PFC_3$) Sulphur-Hexa Fluoride ($SF_3$).

என்பன புவி வெப்பமடைதலுக்கு துணை செய்யும் வாயுக்களாகும். இதில் பிரதானமானது ($Co_2$) ஆகும். ஆனால்($CH_4$) வாயுவானது ($Co_2$) வாயுவினை விட புவியினை வெப்பமடையச் செய்தலில் 25 மடங்கு சக்தி கொண்டது என (IPCC) குழுவினர் கூறுகின்றனர்.

நிலக்கனிமங்களை எரித்தல், காடழித்தல், விவசாய நடவடிக்கை என்பன மனிதனால் மேற்கொள்கையில் புவி சூடடைகின் றது.

புவியின் சூட்டினை தணிப்பதற்காக 2009 ஆம் ஆண்டு டிசம்பர் 9ஆம் திகதி டென்மார்கின் கொப்பனேகன் தலை நகருக்கு சூடான விவாதமொன்றில் 194நாடுகளின் பிரதி நிதிகள், தலைவர்கள் என்போர் மீண்டும் ஒரு தடவை பச்சை வீட்டு வாயு (Green House Gas) குறைப்பது தொடர்பான இணக்கத்தினை ஏற்படுத்தும் நோக்கில் கூடினர். பூமி வெப்பமடைவதினை 2 செல்சியஸ் அளவில் கட்டுப்படுத்தும் எண்ணத்தில் வாயு வெளியீட்டினை GHG 25%-40% இடையில் வெட்டுதல் இலக்குடன் கூடினர். குழு 77 குறைவிருத்தி நாடுகளின் சார்பாகவும் வளர்ந்து வரும் புதிய பொருளாதாரங்களான சீனா, இந்தியா, பிறேசில் என்பனவும் மேற்கு நாடுகளும் மத்திய ஐரோப்பிய நாடுகளும் கூடி மூன்று வாரங்கள் கலந்துரையாடின.

வளர்ச்சியடைந்த நாடுகளே பிரதான பொறுப்பாளர்கள் புவி வெப்பமடைவதற்கு வளர்ந்து வரும் பொருளாதாரங்கள் இன்று புவி மாசடைதலில் பங்கெடுக்கிறனர். ஆனால் மிகக் குறைந்த அளவில் காபன் வெளியேற்றத்தில் பங்கெடுக்கும் வறிய பொருளாதாரங்களும் குறைந்தளவு காபனை வெளியேற்றும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட வேண்டும் என மகாநாடு கேட்டுள்ளது.

புவியினை வாழும் இடமாக பாதுகாப்பதற்கு உலகத் தலைவர் மீண்டும் ஒரு தடவை கூடிய போதும் மகாநாட்டின் முடிபு எதிர் பார்த்த இலக்கினை அடையவில்லை. அமெரிக்காவும் அதன் நலன் விரும்பி நாடுகளும் புவி வெப்பமடைதல் குறித்து புவியில் நிகழ்ந்து வரும் மாற்றங்கள் குறித்து ஆழமாக சிந்திப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கும் அதன் ஏகாதிபத்தியத் தன்மையும் முதலாளித்துவ சந்தை முறைப் பொருளாதாரமும் இன்றும் இடம் வழங்கவில்லை. முதலாளித்துவ சந்தை நடவடிக்கை களின் அடிப்படையில் இருந்து காபன் வெளியேற்றத்தினை கட்டுப்படுத்துவது ஒரு முரண்நிலையாகும்.

**காபன் குடியேற்ற வாதத்தில்**

ஏ.சி.ஜோர்ஜ்
வலயக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

**இருந்து காபன் சமநிலையை நோக்கி (Carbon Neutral)**

புவியினை காபன் மயமாக்கும் நடவடிக்கைகளுக்கு மிகவும் பொறுப்பானவர்களும் காபன்மயமாக்கிகளும் செயன்முறைகளும் கொப்பனேகன் மகா நாட்டில் விவாதிக்கப்பட்டபோதும அதனை கட்டுப்படுத்தி புவி சூடேறுவதினை தடுத்து புவியில் காபன் சமநிலையை ஏற்படுத்தும் வழிவகையில் ஒருமித்த கருத்தினை எட்டவில்லை. ஆர்ச் விஷசல் டெஸ்மன் டுடு (TUTU) கொப்பனேகனில் எட்டப்பட்ட முடிவினை இவ்வாறு வர்ணிக்கின்றார். No Deal is Better Than Having A Load Deal. எனவே எடுக்கப்பட்ட தீர்மானம் பிழையானது என்கின்றார். வேறு சிலர் கொப்பனேகன் பெரிய தோல்வி என்பதுடன் வளர்ச்சி அடைந்த நாடுகளுக்கு (Shame) காலநிலை வெட்கம் என்கின்றனர்.

கொப்பனேகன் மாநாடு அதிக காலம் கடந்த நேரமொன்றில் குறைந்த அளவே சாதித்துள்ளது. மாநாட்டின் இறுதியில் ஒரு சில வளர்ச்சி அடைந்தநாடுகள் பூட்டிய அறைக்குள் தீர்மானங்களை எடுத்து அனைத்து நாடுகளையும் கூட்டியதுடன் அனைத்து நாடுகளின் முடிவாகப் பாவனை செய்யப்பட்டது. பூமியினை காப்பற்றுவதில் மீண்டும் ஒரு தடவை சந்தர்ப்பத்தினை நாடுகளின் தலைவர்கள் தவறவிட்டுள்ளமையினால்



கிறீன்பீஸ் சூழலியலாளர்கள் பூமித்தாயின் மரண ஊர்வலத்தினை பாவனை செய்யும் காட்சி

புவியின் காபன் சமநிலை என்பது பேச்சளவுடன் முடிந்துள்ளது. சூடான் குழு 77க்கு தலைமை தாங்கி இது அரை வேட்காட்டுத் தனமான தீர்மானங் களை கொப்பனேகன் எடுத்துள்ளது எனக் கூறினார்.

மூன்றாம் உலக நாடுகளின் தலைவர்கள் (How much) எவ்வளவு நட்ட ஈடு காபன் அளவினை குறைப்பதற்கு கிடைக்கும் என்ற கரிசனையில் மூழ்கியிருந்தனர். இதனால் புவியினை சூடாக்கும் கைத்தொழில் நாடுகள் வளர்முக நாடுகளின் மீது நட்டஈட்டு உதவி வடிவில் காபன் குடியேற்றவாதத்தினை தொடர முடிவதுடன் புவியினை தமது காபன் குடியேற்ற நாடாகவும் பேணி வர முடியும். கொப்பனேகனில் கலந்து கொண்ட சூழலிய லாளர் ஒருவர் கூறியது போல் Climate Shame )ஆகும்.

(முற்றும்)

# பொருளாதார நெருக்கடியிலிருந்து முற்றாக மீளுமா அமெரிக்கா?

உலகப் பொருளாதாரத்துக்குத் தலைமை தாங்குகிறதோ இல்லையோ அதை வழி நடத்துவது என்னவோ அமெரிக்காதான். சர்வதேச வர்த்தகமும் பங்குச் சந்தைகளும் அமெரிக்க டொலரின் மதிப்புக்கேற்ப அவ்வப்போது மாறுவது தான் அதற்குக் காரணம். அப்படியிருக்க பொருளாதார மந்தநிலை காரணமாக தேக்க நிலையில் இருந்த அமெரிக்க தொழில் துறைக்குப் புத்துயிர் ஊட்டவும் பொருளாதார நடவடிக்கைகளுக்குப் புதிய திசை வேகம் அளிக்கவும் அந்த நாட்டு பட்ஜெட்டை



ஒரு கருவியாகப் பயன்படுத்தியிருக்கிறார் அதிபர் ஒபாமா.

வேலைவாய்ப்புக்களை பெருக்குவது அமெரிக்கத் தொழில் வர்த்தகத் துறைகளுக்கு முன்னுரிமை அளிப்பது ஏழை நடுத்தர மக்களின் துயரங்களை குறைக்கும் விதமாக வரிச்சலுகைகளை உள்ளிட்ட சலுகைகளை அளிப்பது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு புதிய பட்ஜெட்டை தாக்கல் செய்திருக்கிறார்.

1930களில் ஏற்பட்ட பொருளாதார சரிவுக்குப் பிறகு இதுவரை இருந்திராத அளவுக்கு பற்றாக்குறை பட்ஜெட்டை தாக்கல் செய்திருக்கிறார். பற்றாக்குறை அளவு 1.56 ட்ரில்லியன் டொலர்களாகும். மொத்த பட்ஜெட் மதிப்பு 3.83 ட்ரில்லியன் டொலர்களாகும்.

மொத்த பட்ஜெட் மதிப்பில் கிட்டத்தட்ட சரி பாதி பற்றாக்குறையாக இருக்கும் அளவுக்குப் பட்ஜெட் போடப்பட்டிருக்கிறது. இலட்சக் கணக்கான வேலைவாய்ப்புக்களை உருவாக்கவும் அமெரிக்க பொருளாதாரத்துக்குத் தேவைப்படும் அடித்தள கட்டமைப்பு வசதிகளை செய்து தரவும் மின்சாரம் உள்ளிட்ட ஆற்றல்களைப் பெருக்கவும் இந்த நிதி பயன்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சந்திரனுக்கு விண்வெளி வீரர்களை அனுப்பி சோதனை நடத்தும் நாசாவின் திட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதற்குத் தேவைப்படும் கோடிக்கணக்கான டொலர்களை வேறு செலவுகளுக்குப் பயன்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

அதே சமயம், இனி விண்வெளி ஆய்வுகளுக்காக நாசா நேரடியாக செலவழிப்பதற்கு பதில் விண்வெளி வாகனங்கள், ஆய்வுக்கருவிகள் ஆகியவற்றை அமெரிக்காவின் தனியார் நிறுவனங்கள் மூலமே தயாரித்து வாங்கிக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இராணுவத்துக்கான செலவுகளை குறைக்கவோ மாற்றவோ முடிவு செய்யப்பட வில்லை. அமெரிக்காவின் பெரிய தொழில் நிறுவனங்கள் இராணுவ தளபாட உற்பத்தியில் முக்கிய




பங்கு வகிக்கின்றன. அமெரிக்காவின் வெளியுறவுக்கொள்கையே இந்த நிறுவனங்களின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு தான் வகுக்கப்படுகிறது என்று கூட அரசியல் விமர்சகர்கள் கூறுவதுண்டு. எனவே அந்த நிறுவனங்களுக்குப் பாதிப்பு ஏற்படக்கூடிய முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. அரசுக்கு வேண்டிய வருவாயைப் பெருக்க பெரிய தொழில் துறைகளில் வருவாய் மீதும், ஆண்டுக்கு 2.5 இலட்சம் டொலர்களுக்கு மேல் ஈட்டும் தனி நபர்கள் மீதும் கூடுதலாக வரி விதிக்க தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. முதலாளித்துவ பொருளாதாரத்தை ஏற்றுக்கொண்டுள்ள அமெரிக்க அரசால் அந்த முறையைக் கைவிடவே முடியாது. உலகின் தலைமைப்பதவியை வகிக்கவேண்டும் என்ற எண்ணம் காரணமாக சர்வதேச அரங்கில், தான் எடுக்கும் முடிவுகளுக்கு ஏற்ப கூடுதல் செலவுகளையும் தவிர்க்க முடியாது. இவ்விரு நிரந்தர அம்சங்கள் தொடரும் போது இப்படிப்பட்ட பட்ஜெட் தான் சாத்தியம்.

அதேவேளையில் வங்கித் துறையில் ஏற்பட்ட சரிவு , நிதி நிறுவனங்களில் ஏற்பட்ட நெருக்கடி போன்றவற்றால் எதிர்காலத்தில் இந்த நிறுவனங்கள் திவாலாகாமல் காப்பது என்ற வழி முறைகளில் இனி அதிக கவனம் செலுத்தப்படக்கூடும் .

வெளிப்பணி ஒப்படைப்புச் செய்யும் அமெரிக்க நிறுவனங்களுக்கு சலுகைகள் குறைப்பு, வேலைவாய்ப்புகளை அதிகம் உருவாக் கும் நிறுவனங்களுக்கு ஊக்குவிப்பு என்ற அறிவிப்பும் ஏற்கனவே வெளியாகியிருக்கிறது.

அரசின் செலவுகளில் அதிகம் பலன் தரா தவை என்று அனுபவ பூர்வமாக உணரப்பட்ட வற்றைக் குறைக்கவும் வேலைவாய்ப்பை உருவாக்கக் கூடிய வற்றை அதிகப்படுத்தவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த நடவடிக்கைகளால் பலன் ஏற்படாது என்பவர்களும், இவை போதாது என்பவர்களும் உண்டு. ஆனால் இப்போதைக்கு முடிந்தது இவை தான் என்று அமெரிக்க அரசின் பொருளாதார ஆலோசகர்கள் தீர்மானித்திருப் பதையே பட்ஜெட் எதிரொலிக்கிறது.

பராக் ஒபாமா அதிபராகத் தேர்ந்தெடுக் கப்பட்ட போது அமெரிக்காவில் மட்டும் அல்ல உலக அளவிலும் பெரிய எதிர்பார்ப்பு இருந்தது. அமெரிக்கர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவார். ஆபிரிக்க ஆசியக் கண்டங்களில் உள்ள வறிய நாடுகளுக்கு உதவுவார் என்றெல்லாம் பேசப்பட்டது. ஈராக், ஆப்கானிஸ் தான் போன்ற நாடுகளில் அமெரிக்க இராணுவம் தலையிட்டதால் ஏற்பட்ட நெருக்கடிகளைக் குறைப்பார் என்றும் கூறப்பட்டது. அவை எதுவுமே நடைபெறவில்லை.

அவர் பதவிக்கு வந்து ஓராண்டு முடிவடைந்ததை ஒட்டி மக்களிடம் நடத்திய கருத்துக் கணிப்பில் அவருடைய செல்வாக்கு வெகுவாகச் சரிந்திருப்பது தெரியவந்தது. இந்த பட்ஜெட் தற்காலிகமாக அதிபர் ஒபாமாவின் செல்வாக்குச் சரிவைப் சற்றுத் தடுத்து நிறுத்துமே தவிர நிரந்தரத் தீர்வாக இருக்குமா என்பது கேள்விக்குறி.

அமெரிக்காவின் மிகப் பெரிய பலவீனம் சந்தைப் பொருளாதாரத்தை தாரக மந்திரமாகக் கொண்டிருப்பதுதான். மக்களின் ஆடம்பர மோகத்தையும் திட்டமே இல்லாமல் செலவழிக்கும் மனோபாவத்தையும் தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்தி கொள்ளை இலாபம் ஈட்டும் வர்த்தக நிறுவனங்கள் தான் அமெரிக்க அரசின் நிதிக் கொள்கையைத் தீர்மானிக்கின்றன. குடியரசுத் தலைவரும் ஆட்சியும் மாறினாலும் தனியார் முதலாளிகளுக்குச் சாதகமான பொருளாதாரக் கொள்கையை அமெரிக்காவில் மாற்றி விட முடியாது என்பதுதான் யதார்த்த நிலை.

சேமிப்பு என்கின்ற எண்ணமே இல்லாமல் மக்களைச் செலவழிக்கத் தூண்டும் நுகர்வுக் கலாசாரம் தொடரும் வரை அமெரிக்கா தனது நிதி நெருக்கடியிலிருந்து முற்றிலுமாக மீளமுடியுமா என்பது சந்தேகம் தான்.

(நன்றி:தினமணி)

# மனிதனுக்கு பன்றியின் நுரையீரலை பொருத்தலாம்

## லண்டன் விஞ்ஞானிகள் ஆய்வு

(லண்டன்)

மரபணு மாற்றம் செய்யப்பட்ட பன்றியின் நுரையீரல் மனிதனுக்கு பொருந்தும் என விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் உள்ள செயின்ட் வின் சென்ட் மருத்துவமனை மற்றும் ஆல்பிரட் மருத்துவமனைகளில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பன்றியின் நுரையீரலை மனிதர்களுக்கு பொருத்துவது தொடர்பான முதல் சோதனை தோல்வி அடைந்தது. பின் மனித மரபணு சேர்க்கப்பட்ட புதிய பன்றியை உருவாக்கி வளர்த்தனர்.

மரபணு மாற்றப்பட்ட பன்றியின் நுரையீரலை அகற்றி மெஷினில் பொருத்தி ஆல்பிரட் மருத்துவ மனையில் சோதனை நடத்தினர்.

அச்சோதனையில் மனித உடலுக்கு வெளியே மனித ரத்தத்தை சுத்தப்படுத்தும் பணியை பன்றியின் நுரையீரல் சிறப்பாக நிறைவேற்றி உள்ளது.

இன்னும் சில சிக்கல்கள் உள்ளன. அவற்றுக்கும் தீர்வு கண்டுபிடிக்கப்பட்டால் மனித உடலில் பன்றியின் நுரையீரலை வெற்றிகரமாக பொருத்தி இயக்கலாம் என ஆல்பிரட் மருத்துவ மனையின் டாக்டர் கிளென் வெஸ்டால் கூறினார்.

இதற்கு குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் ஆகலாம் என அவர் தெரிவித்தார். கடந்த 10 ஆண்டு கால ஆராய்ச்சிப் பணிகளில் இது மகத் தான முன்னேற்றம் ஆகும் என வெஸ்டால் குறிப்பிட்டார். அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் இந்த வெற்றி குறித்து மகிழ்ச்சி அடையும் சமயத்தில் விஞ்ஞானிகள் சிலர் இந்த முயற்சிகளுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். (6)



கிரீஸ் நாட்டில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் இரண்டாவது முறையாக வெற்றி பெற்ற கார்லோஸ்பாபுவோலியாஸ்க்கு (வலது) அந்நாட்டின் பிரதமர் ஜோர்ஜ் பாப்பன்ரியோ வாழ்த்து தெரிவிப்பதை படத்தில் காணலாம்.

# குழந்தைகளை தத்துகொடுப்பதில் நேபாளத்தில் மோசடி

சர்வதேச அளவில் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்கு குழந்தைகள் தத்தெடுக்கப்படுவதை கண்காணிக்கும் உலக அமைப்பு நேபாளத்திலிருந்து வெளிநாடுகளுக்கு குழந்தைகள் தத்தெடுக்கப்படுவதை நிறுத்தி வைக்கும் படி பரிந்துரை செய்துள்ளது.

நேபாள குழந்தைகளை தத்தெடுக்கும் நடைமுறைகளில் முறைகேடுகள் நடப்பதாகவும் இதனால் இந்த நடைமுறையை நிறுத்த வேண்டும் என்றும் இந்த அமைப்பு வெளியிட்டிருக்கும் வரைவு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சீனா மற்றும் எத்தியோப்பியா போன்ற நாடுகளை விட நேபாளத்தில் இருந்து மற்ற நாடுகளுக்கு தத்தெடுக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை குறைவு தான். ஆனால் சமீபகாலமாக இந்த எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருகிறது. இவர்களில் பலர் அமெரிக்கா, ஸ்பெய்யின், இத்தாலி, பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி போன்ற நாடுகளுக்கு செல்கிறார்கள்.

உலக அளவில் ஒரு நாட்டிலிருந்து மற்ற நாடுகளுக்கு குழந்தைகள் தத்தெடுக்கப்படுவதை கண்காணிக்கும் சர்வதேச அமைப்பு தற்பொழுது வெளியிட்டிருக்கும் வரைவு அறிக்கையில் நேபாளத்தில் குழந்தைகளை தத்தெடுப்பதற்கு கடைப்பிடிக்கப்படும் நடை முறைகள் சர்வதேச தரத்தின் கீழ் அமையவில்லை என்று கூறியுள்ளது.

நாடுகளுக்கிடையில் குழந்தைகள் தத்தெடுக் கப் படுவதை முறைப்படுத்துவதற்காக 1993 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஹேக் ஒப்பந்தத்தில் நேபாளமும் கையொப்பமிட்டுள்ளது. ஆனாலும் தத்துகொடுக்கப்படும் குழந்தையின் நன்மையை கருத்தில் கொள்ளும் வகையில் நேபாள அரசு செயற்படவில்லை என்றும் குழந்தைகள் பலவந்தமாக கடத்தப்படுவதையும் விற்பனை செய்யப்படுவதையும் பின்னர் நாடு கடத்தப்படுவதையும் நேபாள அரசாங்கம் தடுக்கத்தவறிவிட்டதாகவும் இந்த அமைப்பின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (2-6)



பாகிஸ்தானின் திர் பகுதியில் பயங்கரவாதிகள் நடத்திய குண்டுவெடிப்பில் தகர்ந்த பெண்கள் பள்ளியை இராணுவவீரர்கள் பார்வையிட்டனர். இப்பள்ளியில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக இராணுவத்தினருடன் சென்ற அமெரிக்க இராணுவ வீரர்கள் 3 பேர் உட்பட 6 பேர் பலியானமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ்நாட்டுக்கு ஒப்பான ஒரு தாயகத்தை ஈழத்தமிழினம் காண விரும்புகின்றது

## கருணாநிதியிடம் உ.த.ப. இயக்கம் விண்ணப்பம்

(கொழும்பு)

உங்கள் காலத்திலேயே தமிழ்நாட்டுக்கு ஒப்பான ஒரு தமிழர் தாயகத்தை ஈழத்தழினம் காண விரும்புகின்றது. இவ்வாறு உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைமை அலுவலகம் தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதிக்கு அனுப்பி வைத்துள்ள விண்ணப்பம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இலங்கையில் எமது தமிழர் தாயகத்தில் வாழ்ந்து வரும் நமது மக்கள் அனுபவித்த வார்த்தைகளால் வடிக்க முடியாத துன்பங்கள், இழப்புக்கள் ஆகியவற்றின் தாக்கங்களின் மத்தியிலும் இன்னமும் தாம் நம்பிக்கை வைத்துக் கொண்டிருப்பதும் உங்கள் தமிழ் நாட்டின் மீது தான். அந்த தமிழ் நாட்டின் பலமிக்க முதல்வரா கவும் காவலராகவும் உள்ள உங்கள் ஆட்சிக் காலத்தில் தான் தங்களுக்கு ஒரு விடிவு கிடைக்கும் என்று நமது தாயக மக்கள் எதிர்பார்ப்போடுஉள்ளார்கள். இதைப்போலவே புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் ஈழத்தமிழ் மக்களில் பெரும்பான்மையானவர்களும் நம்பிக்கைகளை தாங்கியபடி உள்ளார்கள்.

எனவே உங்கள் காலத்திலேயே தமிழ் நாட்டுக்கு ஒப்பான ஒரு தமிழர் தாயகத்தை ஈழத்தமிழினம் காண விரும்புகின்றது. இதற்கான முன்னெடுப்புக்களையும் தீர்மானங்களையும் மிகவிரைவில் நடைபெறவுள்ள உங்கள் கட்சியின் ஆட்சிக் குழுக் கூட்டத்தில் முன்மொழிந்து அதனை மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டுவந்து எங்கள் கனவுகளை நனவாக்குங்கள். இவ்வாறு உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைமை அலுவலகம் தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதிக்கு அனுப்பி வைத்துள்ள விண்ணப்பம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் கணேசலிங்கமும் இயக்கத்தின் சர்வதேச ஊடகத் தொடர்பாளர் திரு ஆர். என். லோகேந்திரலிங்கமும் இணைந்து அனுப்பி வைத்துள்ள மேற்படி விண்ணப்பத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

சில மாதங்களுக்கு முன்னர் நீங்கள் இலங்கைக்கு அனுப்பி வைத்த பாராளுமன்ற குழுவிடம் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களுக்கு விரைவில் அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டு அவர்கள் சுதந்திரமாக வாழ வழி செய்யப்படும் என்று உறுதியளித்ததை நாம் இந்த சந்தர்ப்பத்தில் தங்கள் மேலான கவனத்திற்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றோம்.

நமது மக்கள் மீதான உங்கள் அக்கறையும் கவனிப்பும் வெளிப்படும் வண்ணம் அடிக்கடி நீங்கள் தமிழ் நாட்டில் இருந்த வண்ணம் வெளியிடும் அறிக்கைகளையும் எண்ணங்களையும் நமது மக்கள் உலகெங்கும் வாழ்ந்தபடி அவதானித்த வண்ணம் உள்ளார்கள். அந்த நம்பிக்கைகளின் அடிப்படையிலேயே இந்த விண்ணப்பத்தை நாம் தங்கள் மேலான கவனத்திற்கு சமர்ப்பிக்கின்றோம்.

ஐயா நீங்கள் மனது வைத்தால் பல விடயங்களை எமது மக்களுக்காகச் செய்யலாம். அதுவும் உங்கள் காலத்திலேயே செய்து முடிக்கலாம். இந்தியாவின் மத்திய அரசாங்கமாக உள்ள காங்கிரஸ் அரசு தற்போது இலங்கையில் குறிப்பாக வடபகுதியில் பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளதாக அறிகின்றோம். விமான நிலையம் ,அன்னை இந்திரா காந்தி நினைவான பல்கலைக்கழகம்



ஆகியனவும் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆனால் இவ்வாறான திட்டங்களால் நமது மக்களின் அரசியல் அபிலாசைகள் பூர்த்தி செய்யப்படக் கூடிய சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவாகவே இருக்கும் அங்கு உங்கள் இந்திய அரசாங்கம் எந்த அபி விருத்தியை மேற்கொண்டாலும் அது இலங்கை அரசாங்கத்திற்கு மட்டுமே நன்மை பயக்கும் விடயமாக அமையுமே தவிர நமது மக்களின் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்கின்ற திட்டங்களாக அமையாது.

எனவே நமது மக்களுக்கு அதிகாரப் பகிர்வுகளை வழங்கும் வகையில் இலங்கை அரசிற்கு அழுத்தங்கள் இந்தியாவில் மத்திய அரசிடமிருந்து அதிகளவில் கொடுக்கப்படுவதை தாங்கள் உறுதி செய்ய வேண்டும்.

உங்கள் நாட்டின் உங்கள் முயற்சியால் தமிழ் மொழிக்கு செம்மொழி அந்தஸ்து கிடைத்துள்ளது. இதைப்போன்று பல நல்ல அம்சங்கள் உங்கள் காலத்தில் இந்தியாவிலும் தமிழ் நாட்டிலும் இடம்பெற்றுள்ளன. அதைப்போன்று ஒரு மாற்றம் நமது தாயகத்திலும் இடம்பெற வேண்டும். அதை நிறைவேற்றுவதற்கு தாங்கள் முயற்சி எடுக்க வேண்டும்.

எனவே மிக விரைவில் கூடவுள்ள உங்கள் கட்சியின் ஆட்சிக் குழுக்கூட்டத்தில் நமது மக்களின்விடிவுக்காகவும் சுதந்திரத்திற்காகவும் தூணாக நிற்கக்கூடிய தீர்மானங்களை எடுத்து அதை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து இலங்கையின் தமிழர் தாயகப் பிரதேசங்களில் நமது மக்கள் அரசியல் அதிகாரங்களை தங்கள் கைகளில் எடுத்துக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்துங்கள். இதன் மூலம் உங்கள் தமிழ் நாட்டுக்கு ஒப்பான தமிழர் தாயகம் ஒன்று அமைவதை உறுதி செய்யுங்கள்.

இவ்வாறு உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கம் கலைஞர் கருணாநிதி அவர்களுக்கு அனுப்பிவைத்துள்ள விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-6)

# கொலைகளுக்கு பொறுப்பு கூற வேண்டியவர்கள் வெள்ளை ஆடையுடன் விகாரைக்கு செல்கிறார்கள்

## ரில்வின் சில்வா

(கொழும்பு)

கொலைகளுக்கு பொறுப்புக் கூறவேண்டியவர்கள் வெள்ளை ஆடைகளை அணிந்து பூத் தட்டுகளை ஏந்தி விகாரைகளுக்கு செல்வதுடன் போதி மரங்களையும் சுற்றி வருகின்றனர்.

இந்த வெள்ளையாடை அணிந்தவர்களே கொலைகளை செய்கின்றனர். வீதிகளில் மக்களை வகைதொகையின்றி கொலை செய்யும் இடியமீன் நிர்வாகமே இலங்கையில் இருப்பதாக ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்ததாவது,

கொரக்கா புளிகளை வேடன் வேட்டை இறைச்சியாக மாற்றுவானாம் அது போன்ற அரசாங்கமே தற்போது ஆட்சியில் இருக்கிறது. கொலையாளிகள் சுதந்திரமாக நடமாடுகின்றனர். அப்பாவிகளை பிடித்து சிறையில் தள்ளுகின்றனர். உண்மையான சூழ்ச்சியாளர்களுக்கு மகுடம் சூட்டப்படுகிறது. கொலைகாரர்களுக்கு தண்டனை வழங்குமாறும் நாம் அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம்.

நாட்டு மக்களுக்கு நியாயத்தை நிலை நாட்டுங்கள் என தாம் அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்வதாகவும் ரில்வின் சில்வா கூறியுள்ளார்.

பத்தரமுல்ல பெலவத்தையில் உள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

தேர்தலுக்கு முன்னர் கடந்த 25ஆம் திகதி கடுமையாகத் தாக்கப்பட்ட ஜே.வி.பியின் அம்பலாங்கொட பிரதேச சபையின் உறுப்பினர் சந்திரதாச நைதுவாவடு கடந்த 2ஆம் திகதி உயிரிழந்தார். அந்த மரணத்தை இயற்கையான மரணம் என வெளிகாட்ட அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

இந்த கொலைப் பழியில் இருந்து அரசாங்கம் விலகிச் செல்ல முடியாது. கொலை கலாசாரத்தையும் அதில் இருந்து அரசாங்கம் விலகிச் செல்ல முடியாது. கொலை கலாசாரத்தையும் அதில் இருந்து மீள மேற் கொள்ளும் நடவடிக்கைகளையும் ஜே.வி.பி அருவருப்புடன் கண்டிக்கிறது.

கடந்த 25 ஆம் திகதி இரவு அம்பலாங்கொட பொல்வத்தையில் இந்துனில்' உள்ளிட்ட வன்முறையாளர்கள் சுமார் 15 பேர் தோழர் சந்திரதாச மீது தாக்குதல் நடத்தினர். இவர்கள் சாதாரணமாக அவரை தாக்கவில்லை. பொலிஸாரின் சித்திரவதை போன்ற தாக்குதலை அவர்கள் நடத்தியுள்ளனர். தலையில் பலகையொன்றை வைத்து இரும்பு கம்பியினால் தாக்கியுள்ளனர். இப்படி தாக்கினால் உடலின் மேற்பகுதியில் காயம் ஏற்படாது. உட்காயங்கள் ஏற்படும். தாக்குதல் நடத்தியவர்கள் சந்திரதாசவை பொலிசாரிடம் கொண்டு சென்று ஒப்படைத்துள்ளனர். பொலிஸார் தாக்கப்பட்டவரை குற்றவாளி யாக கைது செய்தனர். பின்னர் அவர் சிறைச்சாலையில் இருந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டார்.

ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவினரே சந்திரதாசவை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். அதன் காரணமாகவே முறைப்பாடுகள் இல்லாமல் ஒப்படைத்தவர்கள் யார் என்பதை பொலிசார் அறிவர். அதனால் அவர்களை பொலிசாரால் கைதுசெய்ய முடியும்.



ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவினர் கொலைகளை மேற்கொள்கின்றனர். ஆயினும் நியாயம் நிலைநாட்டப்படுவதில்லை. மனித உயிர்கள் பற்றிய எந்த பொறுப்புணர்வும் அரசாங்கத்திடம் இல்லை எனவும் ரில்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார். (2-6)

# இடமாற்ற திட்டத்தினை அமுல்படுத்தக்கோரி பொது ஊழியர் சங்கம் அமைச்சருக்கு கடிதம்

(கொழும்பு)

முகாமைத்துவ உதவியாளர் சேவை அலுவலக பணியாளர் சேவை என்பவற்றில் ஐந்து வருடங்களுக்கு மேல் ஒரே இடத்தில் பணியாற்றுவோருக்கு பொது நிர்வாக அமைச் சின் 2/2009 சுற்றறிக்கைக்கு அமைவாக இடமாற்றம் வழங்க பொது நிர்வாக அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு கோரும் கடிதம் ஒன்றை அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் சார்பில் அதன் தவைர் எஸ்.லோகநாதன்,, பொது நிர்வாக அமைச்சர் சரத் அமுனுகம மற்றும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளனர். அந்தக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

நாட்டிலுள்ள குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள அநேக திணைக்களங்களில் முகாமைத்துவ உதவியாளர் சேவை அலுவலகர் பணியாளர் சேவையில் உள்ள பலர் பத்து வருடங்களுக்கு மேல் ஒரே இடத்தில் இடமாற்றம் ஏதுவுமின்றி பணியாற்கின்றனர்.இதனால் ஊழல் , மோசடிகள் , துஷ்பிரயோகங்கள் இடம்பெற்று வருகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. இன்னும் சில இடங்களில் சிலர் திணைக்களத் தலைவர்களின் எடுபிடிகளாகவுள்ளனர்.

குறிப்பாக நீர்பாசனத்திணைக்களம் , பிரதேச செயலகங்கள், கடற்றொழில் திணைக்களம், பதிவாளர் நாயகம் திணைக்களம், மாவட்டசெயலகம் என்பவற்றில் அநேகர் 10 வருடங்களுக்கு மேல் உயில் எழுதிக் கொடுத்தவர்கள் போன்று பணியாற்றி வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக சுட்டிக்காட்டி 17.08.2009 ஆம் திகதி நாம் தங்களது அமைச்சுக்கு முறையீடு செய்திருந்தோம். இவற்றுக்கு எதிராக இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் உள்ளதை யிட்டு கவலையுடன் தெரிவிக்கின்றோம்.

பொது நிர்வாக உள் நாட்டு அலுவல்கள் அமைச்சின் சுற்று நிருபத்திற்கமைவாக் வருடாந்த இடமாற்றங்கள் இடம்பெறவேண்டும் என வலியுறுத்திக் கேட்கின்றோம். இச் சேவைகளில் பணியாற்றுபவர்களில் பலர் வருடா வருடம் இடம் மாற்றம் கோரி விண்ணப்பிக்கும் போது,ஆளணி வெற்றிடம் இல்லை என்ற காரணம் காட்டப்பட்டு அவர்களது இடமாற்றங்கள் நிராகரிக்கப்படுவதாகவும், மனக்காயங்களுடன் வாழ்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

ஒரு பகுதியினர் சலுகைகளை அனுபவிக்கவும் , மறுபகுதியினர் தொடர்ந்தும் புறக்கணிப்புக்குள்ளாகவும் வேண்டுமா என்ற நியாயமான வினா எழுப்பப்படுகிறது. எனவே சகல அரச ஊழியர்களுக்கும் ஏற்புடையதான வகையில் வருடாந்த இடமாற்றத்திட்டத்தினை அமுல் படுத்த வேண்டும் என அந்த கடிதத்தில் வலியுறுத்திக் கேட்கப்பட்டுள்ளது.(2-6)

# நெற்பீடைகளும் அவற்றை முகாமைப்படுத்தலும்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...




**கலாநிதி கு.மிகுந்தன்**
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்


10-IV

### ஒட்டுண்ணிகளும் சிலந்திகளும்

இப்பூச்சிக்கு நிறைய எதிரிகள் நெல் சூழல் தொகுதியில் உண்டு. குறிப்பாக முட்டை மற்றும் புழு பருவங்களில் ஒட்டுண்ணிகள் இருக்கின்றன. முட்டை ஒட்டுண்ணிகளான


றெற்றாச்சிலாசு, ரீலோநோமசு மற்றும் ரைக்கோகிரம்மா ஆகியனவும் புழு ஒட்டுண்ணிகளாக ஜசோரிமா மற்றும் அமோரோமோ ஆகிய பூச்சி ஒட்டுண்ணிகளும் அவதானிக்கப்பட்டுள்ளன.


நெல் வயல்களில் காணப்படும் இரைகௌவிகளுள் சிலந்திகளின் பங்களிப்பு முக்கியமானது. அதிகளவிலான சிலந்தி வலைகளை நெல் வயலில் அவதானித்தால் வயலினுள் இறங்கி இச் சிலந்தி வலைகளை தொந்தரவு செய்யாது விடுவது நல்லது. காலையில் நெல் வயலைப் பார்க்கும் போது கிழக்கிலிருந்து உதிக்கும் சூரியனின் ஒளிபட்டு சிலந்தி வலைகள் மினுமினுப்பதனை அவதானிக்கலாம்.

பல்வேறு வகையான பல அளவினதான சிலந்திகள் நெல்வயலில் காணப்படும்.

இவற்றினது வலைகளனைத்தும் பூச்சிப் பீடைகளுக்கான பொறிகளாகும். அநேகமான சிலந்திவலைகளில் சிக்கிக் கொள்ளும் பறக்கும் வல்லமையுடைய பூச்சிப் பீடைகளனைத்தும் சிலந்திகளால் இரையாக்கப்படும். எனவே தான் தேவையற்று சிலந்தி வலைகளை குழப்பிவிடக்கூடாது. நெல் மஞ்சள் சந்து குத்தியினது அந்துப்பூச்சியும் இவ்வாறு இச் சிலந்திவலைகளில் சிக்கிக் கொள்ளும்.

இயற்கையாகவே பீடையையும் அதனைக் கட்டுப்படுத்த இரைகௌவிகளையும் ஒட்டுண்ணிகளையும் படைத்திருக்கும் விந்தை பாரீர்.




மஞ்சள் சந்துக் குத்தியின் சேதம் அதிகமாகக் காணப்படும் இடங்களில் நாற்று நடுகை மூலம் நெல்லை விளைவிப்பது நன்று. இதன்மூலம் நாற்றுக்களில் இடப்படும் முட்டைகளை மேலே குறிப்பிட்டவாறு இலை நுனிகளை கிள்ளுவதன் மூலம் அகற்ற முடியும். ஆனால் நேரடியாக விதையெறிந்து நெற்பயிர் வளர்க்கப்பட்டால் ஆரம்பத்திலேயே சேதமதிகமாக வாய்ப்புக்கள் நிறையவுண்டு. நேரடியாக விதையெறிதல் (Direct Sowing) இற்கும் நாற்று நடவு செய்தலுக்கும் (Transplanting) இடையிலான



வேறுபாட்டை அவதானித்தீர்களா? எப்போதுமே நாற்பது நடவு செய்து விளைவிக்கப்படும் பயிர்களில் பீடை முகாமைத்துவத்தை ஒருங்கிணைத்து இலகுவாக வினைத்திறன் மிக்கதாக செய்திட முடியும். நாற்று மேடையில் பயிர் விளைவிக்கப்படும் காலங்களில் நாற்று மேடையினை சிறந்த முறையில் பராமரிப்பதன் மூலம் பூச்சிகளை கட்டுப்படுத்துவது இலகுவானது.

### அடிக்கட்டையிலிருந்து பெருக வாய்ப்பு

நெல்லினை அறுவடை செய்யும்போது அடியொட்ட வெட்டுவது சிறந்தது. அடிக்கட்டையை மேலே விட்டு அறுவடை செய்தால் அல்லது மேலாக கொய்தால் மீதமுள்ள நெற் பயிரில் புதிதாக மட்டம் வெடித்து நெல் வளரும் போது அதில் இப்பூச்சி பீடை இருந்து பெருகி பாரியளவில்தேசத்தை ஏற்படுத்த வாய்ப்புண்டு.

எனவே இப்பூச்சிப் பீடையினைக் கட்டுப்படுத்த அடிக்கட்டையை விளைநிலத்தில் விடாது அடியொட்ட அறுவடை செய்தால் நல்லது. யாழ்ப்பாணப் பகுதியில் அடியொட்ட வெட்டப்படும் நெற்பயிர்கள் வன்னிப் பிரதேசத்தில் அடியினை விட்டு அறுவடை செய்யப்பபடும். வன்னிப் பிரதேசத்தில் வைக்கோலுக்கு அதிகளவில் தேவையேற்படாத நிலையில் நெல்லின் அடிகளை அதிகளவில் வைக்கோலை விட்டு வெட்டப்படும். ஆனால் யாழ்ப்பாணத்தில் அடியொட்ட வெட்டப்படுவது குறிப்பிடத்தக்கது.

விவசாயத்திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்டதன் படி பைபுரோனில் (Fipronil 50 கி/லீ SC), காபோசல் பான் EC 200கி/லீ, குயினல்பொஸ் 200கி/லீ EC என்பவற்றை விசிறியும் கார்போபியூரான் 3% குருணலை ஓரங்குல நீர் இருக்கும்போது எறிந்தும் இப்பூச்சி பீடையைக் கட்டுப்படுத்தலாம். இயன்றவரை பீடை நாசினிகள் பயன்படுத்துவதை தவிர்ப்பதே சிறந்தது.

(தொடரும்)

# நெற்பயிரில் இலைச் சுருட்டிப் புழுவின் தாக்கம்

### முக்கிய குறிப்பு

ஒரு வயலில் இலைச்சுருட்டி தொடர்ந்தும் தாக்கினால் முதற் பயிரில் புதிதாக வெளிவரும் இலைகள் தொடர்ந்தும் தாக்கப்படும்.

இப்படியான வயல்களில் புதிதாக தாக்கப்பட்ட இலைகளைப் பிடுங்கி விரித்துப் பார்த்தால் புழுக்களை அவதானிக்கலாம்.

எனவே விவசாயிகள் வயல்களில் ஆங்காங்கு இறங்கி புதிதாக தாக்கப்பட்ட இலைகளைப் பிடுங்கி பார்த்து புழுக்களை அவதானித்தால் மட்டுமே நாசினிகளை விசிற வேண்டும்.

தற்போது பல நெல்வயல்கள் பூக்கும் பருவத்தில் காணப்படுவதால் பிற்பகலில் (3 மணிக்குப் பின்) நாசினி விசிறுவது உகந்தது. (முற்றும்)


**திரு. க. தனபாலசிங்கம்**
பாடவிதான உத்தியோகத்தர் (பயிர் பாதுகாப்பு)
பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி) அலுவலகம்,
யாழ்ப்பாணம்.


| இரசாயனப் பெயர் | வர்த்தகப் பெயர் | கலவை அளவு | 16 லீற்றர் தாங்கிக்கு தேவையான நாசினி அளவு |
|---|---|---|---|
| குறோமோ பெனோசைட் 50 கி/லீ/எஸ்.சி | மற்றிக் 5% எஸ்.சி | 10 மி.லீ. -10லீ | 16 மி.லீ |
| பிப்றோனில் 50 கி/லீ/எஸ்.சி | றீஜென்ற் 50 எஸ்.சி | 12 மி.லீ - 10லீ | 19 மி.லீ |
| ரெபியூ பெனோசைட் 200 கி/லீ/எஸ்.சி | மிமிக் 20 எவ் | 20 மி.லீ - 10லீ | 32 மி.லீ |
| மெதொக்சி பெனோசைட் 240கி/லீ/எஸ்.சி | றண்ணர் | 10 மி.லீ - 10லீ | 16 மி.லீ |
| குளோர் பைறிபொஸ் 200 கி/லீ/ஈ.சி | கொமாண்டோ த குளோர் பைறிபொஸ், குளோர்பான், றைசன் 20, டேர்ஸ்பான், பின் (F)பொஸ் 20, மக்(F) பொஸ் பைறினெக்ஸ் 20 ஈ.சி | 14 மி.லீ - 10லீ | 64 மி.லீ |
| குளோர் பைறிபொஸ் 400 கி/லீ/ ஈ.சி | குளோறிபொஸ் 400, அமிக்குளோர், சீபொஸ் 40 ஈ.சி, சி.ஜி றைடர், சிகரா, குளோர்ப்பான் பிளஸ், குளோர்பைறிபொஸ் 40%,கொமாண்டோ, றைசன் 40, டடாஸ், டிறக்கன், எம்பொஸ் 40 ஈ.சி, பின் பொஸ் 40, கார்குரோன், இன்சிபான்,யூடோ 40 ஈ.சி, லீடோ பான், லோஸ்பான் 40 ஈ.சி, மொறிபொஸ் 40, நொக்கியா ,ஒறுகா 400, பட்டாஸ் , பெஸ்றபான் சுப்பர், பைறிபான், பைறிமெக், பைறினெக்ஸ் 400, றம்போ, சாண்டோ, ரைகர்-400, யூனிபொஸ் 400, விற்றாசீல்ட் 40 ஈ.சி. | 20 மி.லீ - 10லீ | 32 மி.லீ |
| நவலுறோன் 100கி/லீ/ஈ.சி | நவலுறோன் 10% ஈ.சி | 10 மி.லீ - 10லீ | 16 மி.லீ |
| குளோர் புளூசரோன் 50கி/லீ/ஈ.சி | அற்றபுரோன் 5 ஈ.சி | 10 மி.லீ - 10லீ | 12 மி.லீ |
| அசடிறக்ரின் 10கி/லீ/ஈ.சி | நீம் அசால் ரி/எஸ் | 50 மி.லீ - 10லீ | 80 மி.லீ |
| பென்தியோன் 500கி/லீ/ஈ.சி | லெபேசிட் ஈ.சி. 50 | 50 மி.லீ - 10லீ | 80 மி.லீ |
| அசிபேற் 75% க.தூ | அசினெஸ், அசிற்றோல், அப்பலோ, அக்ஷன் - ஆர், அக்ஸ்ரார் அசிபேற், சீ -பேற், கார்தீன், லான்சனர், ஓ-பேற்,ஓர்தீன், சுப்பதீன், சறண்டெர். | 15 கிராம் - 10லீ | 24 கிராம் |

நாழி நெல்லுக்கு ஒரு புடைவை விற்றாலும் நிர்வாணம் நாய்க்குத் தான்

-தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# மூச்சுத் திணறுகிறது யாழ். நகர் சற்றேனும் ஆறுதல் கொடுங்கள்

யாழ்ப்பாண நகரில் ஏற்பட்டுள்ள சனநெருக்கடியை பார்க்கும்போது தலைசுற்றுகிறது.

தென்பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகின்ற பெருந்தொகை சிங்கள மக்கள்- அவர்களை ஏற்றிவருகின்ற வாகனங்கள் யாழ்ப்பாண நகரை ஆக்கிரமித்துக் கொள்ள,

யாழ்ப்பாண நகர் மூச்சு விடமுடியாமல் திணகின்றது. இதற்கு மேலாக பொருட்களை ஏற்றிவரும் கொள்கலன்கள்நினைத்தபாட்டில்நினைத்த நேரத்தில் தாம் விரும்பும் வீதியால் பயணிக்கும் துன்பம் சொல்லுந்தரமன்று.

இவை எல்லாம் எதற்காக என்ற கேள்விக்கு விடைகாண முடியாத பரிதாபம் தொடர்கிறது.

பெருந்தொகையான சிங்கள மக்களின் வருகையால் யாழ். நகரம் பல்வேறு வகைகளில் பிரசினைகளை எதிர்கொள்கின்றது என்ற உண்மை மறுப்பதற்கில்லை.

எவரும் எங்கும் செல்ல முடியும் என்பது மனித உரிமையின் பாற்பட்டது.

இதனை யாரும் எதிர்க்க முடியாது. அதே நேரம் அதிகரித்த மக்கள் தொகையினால் ஏற்படக்கூடிய சுற்றுச்சூழல் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்பதை எவரும் மறுக்கவும் மாட்டார்கள்.

யாழ். நகரம் தாங்க முடியாத அளவில்- பெருந்தொகையாக வரும் சிங்கள மக்கள் துரையப்பா விளையாட்டரங்கு, ஆரியகுளப் பகுதி உள்ளிட்ட வெறுவெளிகளில் தங்குகின்றனர். இவ்வாறு தங்குபவர்களுக்கான மலசலகூட வசதிகள் மற்றும் அவர்களுக்குத் தேவையான தண்ணீரின் கிடைப்பனவு என்பன குறித்துக் கவனம் செலுத்த முடியாத அளவில் நிலைமை உள்ளது.

யாழ்ப்பாண மக்களை டெங்கு நோய் வஞ்சம் தீர்க்கும் இவ்வேளையில்,

யாழ். நகரின் சுற்றுச்சூழலும் பாதிக்கப்படும் ஆயின் நெருப்புக்காய்ச்சல், வாந்திபேதி, செங்கண்மாரி போன்ற தொற்றுநோய்களும் மக்களை சங்காரம் புரியத் தொடங்கிவிடும்.

எனவே யுத்தத்தால் அழிந்து போன யாழ்ப்பாணத்தையும், மனமுடைந்து போன தமிழ் மக்களையும் காட்சிப் பொருளாக காணத்துடிக்கும் எமது அருமைச் சிங்களச் சகோதரர்களே! ஆறுதலாக-அவசரமின்றி யாழ்ப்பாணத்திற்கு வந்து போங்கள்.

நெருக்கடி நிலையால் ஏற்படக் கூடிய நோய் உங்களையும் தாக்கும் அல்லவா?

பாவம் யாழ்ப்பாணம் மூச்சு விடமுடியாமல் திணறும் நிலைமையைப் புரிந்து கொண்டு செயற்படுங்கள்.

# இரண்டு தேசம் இணைந்த ஒன்றியம் என்ற தீர்வையே வலியுறுத்துவோம்

## சிவாஜிலிங்கம் எம்.பி. தெரிவிப்பு



இரண்டு தேசம் இணைந்த ஒன்றியம் என்ற தீர்வை வலியுறுத்த அனைத்து சிறுபான்மைக்கட்சிகளும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாம் பாராளுமன்றத் தேர்தலில் தனித்தா அல்லது இணைந்தா போட்டியிடுவது என்ற முடிபை இப்பொழுது கூற முடியாது. ஏனெனில் எமது ரெலோ அமைப்பின் நடவடிக்கைக்குழு இன்று கூடுகின்றது. இதில் முக்கியமான தீர்மானங்களை எடுத்து பின்னர் இறுதி முடிபு எடுப்போம்.

அத்துடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் எமது கட்சியும் அங்கம் வகிக்கின்றது. எதிர்வரும் பொதுத்தேர்தல் தொடர்பாக விரைவில் கூட்டமைப்பு இறுதிமுடிபினை எடுக்கும் .அம் முடிபுகளைப்பொறுத்தே எமது எதிர்கால நிலைப்பாடு தெரிய வரும்.

கூடுதலாக அடுத்த வாரமளவில் இம் முடிபுகள் அறியக் கூடியதாக அமையும். சிறுபான்மை இனங்கள் ஒன்றிணைந்தால் மட்டுமே பலமாக அரசியல் பேரம் பேச முடியும். தேர்தலில் வேறு வேறாக நின்று போட்டியிட்டாலும் அரசியல் தீர்வில் ஒன்றுபடல் வேண்டும்.

நாம் இன்றும் நாடு பூராகவுள்ள வடக்கு கிழக்குத் தமிழ் பிரதிநிதிகள் , மலையகம் மற்றும் சிங்கள இனத்தொழிலாளர் வர்க்கம் ஆகியவற்றுடன் ஒன்றிணைந்து அரசியல் தீர்வுக்கான பேச்சு நடத்திக் கொண்டிருக்கின்றோம்.

இதில் இரண்டு தேசம் இணைந்த ஒன்றியம் என்ற தீர்வை நோக்கியே வலியுறுத்துவோம். இது தமிழீழத்திற்கு நிகரான தீர்வாக கருத முடியும்.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து விலக்கி விட்டதாக பத்திரிகைகளில் செய்தி வெளியாகியது. இச்செய்தியை நேசன் பத்திரிகைக்கு வழங்கிய செய்தியில் இருந்தே இணையங்களும் பத்திரிகைகளும் பிரசுரித்தன. அதில் தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பு அதிருப்தியாளர்கள் அங்கத்துவம் தொடர்பாக பரி சீலிக்கப்படும் என்றே தெரிவிக்கப்பட்டிருந்தது. இது வழமையான நடவடிக்கையே ஆகும்.

ஆனால் என்னை விலத்தியது என்பது தவறான செய்தி என்றும் தெரிவித்தார். (2-246)

# குப்பைத்தொட்டியில் வாக்குச்சீட்டுகள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படும்

## -தேர்தல் ஆணையாளர் -

(கொழும்பு)

குப்பைத் தொட்டியில் வாக்குச் சீட்டுக்கள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படும் என தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி தொழில் நுட்பக் கல்லூரிக்கு அருகாமையில் உள்ள குப்பைத் தொட்டி ஒன்றிலிருந்து ஒரு தொகுதி வாக்குச் சீட்டுக்கள் மீட்கப்பட்டுள்ளன.

64 வாக்குச் சீட்டுக்கள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தலதா அதுகோரல தெரிவித்துள்ளார். குறித்த வாக்குச் சீட்டுக்கள் ஜெனரல் சரத் பொன்சேகா விற்கு ஆரவானவை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை நடாத்துவதற்கு விசேட குழுவொன்று ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பிரதித் தேர்தல் ஆணையாளர் தலைமையிலான குழு இந்த விசாரணைகளை ஆரம்பிக்கும் நோக்கில் இரத்தினபுரி சென்றுள்ளதாக தெரிகிறது. (2-6)

# நியூஸ்பெஸ்ட் ஊடகவியலாளர் மீது தாக்குதல்; காரணமானவர்களை கைது செய்யுமாறு உத்தரவு

(கொழும்பு)

அனுராதபுரம் வைத்தியசாலையில் வைத்து நியூஸ் பெஸ்ட் பிராந்திய ஊடகவியலாளர் றிஸ்வி மஹ்ரூப் மீது தாக்குதல் நடத்தியவர்களை உடனடியாகக் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர் படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

அனுராதபுரம் பிரதம நீதவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமான தர்ஷிகா விமலசிறி நேற்று முன்தினம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இது தொடர்பாக முறையான விசாரணை நடத்தி நீதிமன்றத்துக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறும் பொலிசாருக்கு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

றிஸ்வி மஹ்ரூப் மீது தாக்குதல் நடத்தி அவரின் கமரா உபகரணங்களை அபகரித்த சம்பவம் தொடர்பில் அனுராதபுரம் பொலிசார் அறிக்கையொன்றை நீதிமன்றுக் குச் சமர்ப்பித்து விடயங்களைத் தெளிவுபடுத்தினர்.

எப்பாவெல ரத்மல்வெட்டிய பகுதியில் 5பேர் காயமடையக் காரணமான துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பான செய்திகளைச் சேகரிக்க அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்குச் சென்றபோதே றிஸ்வி மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் அத்துடன் 2இலட்சம் ரூபா பெறுமதியான அவரது தொலைக் காட்சிப் படப்பிடிப்பு கருவியும் சேதப்படுத்தப்பட்டதுடன் தாக்குதல் நடத்தியவர்கள் அவரின் படப்பிடிப்புக் கருவிகளையும் தைக்தொலைபேசியையும் பறித்துச் சென்றுள்ளதாக பொலிசார் நீதிமன்றுக்கு அறிவித்தனர்.

வடமத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைக்கமைய விசாரணையை நடத்தி சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுப்பதாக பொலிசார் நீதி மன்றுக்கு அறிவித்தனர். (2-6)

# சுதந்திர தினத்தை முன்னிட்டு ஆயிரத்து 753 கைதிகள் விடுதலை

(கொழும்பு)

இலங்கையின் 62 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் ஆயிரத்து 753 சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சிறு குற்றச் செயல்களில் ஈடுபட்ட நபர்களே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஒன்று முதல் மூன்று வருட காலம் வரையில் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் நபர்களுக்கு இரண்டு வார கால தண்டனைக் குறைப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தண்டம் மற்றும் அபராதப் பணத்தை செலுத்த முடியாதவர்களுக்கு சலுகைகள் வழங்கப்படவுள்ளதாக நீதிம மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

குறிப்பாக போகம்பரை மற்றும் வெலிக்கடை சிறைச்சாலைகளைச் சேர்ந்த கைதிகளே அதிக எண்ணிக்கையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (2-6)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## மக்கள் தொண்டே மகேசன் தொண்டு



தேவையில்லாத விடயங்களைப் பற்றி அலட்டிக்கொள்வதில் நமது சக்தியைச் சிதறவிடாமல், அமைதியுடனும் ஆண்மையுடனும் ஆக்கபூர்வமான பணிகளில் நாம் ஈடுபடுவோமாக.

யார் ஒருவர் எதைப் பெறுவதற்குத் தகுதி உடையவராக இருக்கிறாரோ, அதை அவர் பெறாமல் தடுத்து நிறுத்துவதற்கு இந்த பிரபஞ்சத்திலுள்ள எந்தச் சக்தியாலும் முடியாது. இந்தக் கருத்தை நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். கடந்த காலம் மிகவும் பெருமைக்கு உரியதாக இருந்தது என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை, ஆனால், எதிர்காலம் மேலும் சிறப்பாக அமையப்போகிறது என்பதை நான் முழுமனத்துடன் நம்புகிறேன்.

# வடக்கு - கிழக்கு அரசியல் தீர்வு தேவை என்பதை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை

## ஜாதிக ஹெல உறுமய

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு மாகாணங்களுக்கு அரசியல் தீர்வு என்ற ஒன்று தேவையில்லை என்ற நிலைப்பாட்டிலேயே நாங்கள் இருக்கின்றோம்.

எனினும் வடக்கு, கிழக்குக்கு அரசியல் தீர்வு தேவை என்பது ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டால் அதனை நாங்கள் ஏற்றுக் கொள்வோம் என்று ஜாதிக ஹெல உறுமயவின் சட்ட ஆலோசகரும் மேல் மாகாண சபை அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது,

வடக்கில் மாகாண சபை தேர்தல் விரைவில் நடத்தப்பட்டு அங்கு மாகாண சபை அமைக்கப்படும் என்று மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப் படவுள்ளன.

வடக்கில் மாகாண சபை அமைக்கப்படுவதை ஜாதிக ஹெல உறுமய எதிர்க்கவில்லை. அதற்கு முழுமையான ஆதரவினை வழங்குகின்றது.

மேலும் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவில் இடம்பெற்றுள்ள எமது கட்சி வடக்கில் உடனடியாக மாகாணசபை அமைக்கப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தியுள்ளது.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைவான மாகாணசபை முறைமையினை நாங்கள் எதிர்க்கின்றோம். ஆனால் தென் பகுதியில் மாகாணசபை முறைமை இருக்கின்ற நிலையில் வடக்கில் மட்டும் இயங்காமல் இருக்கின்றமையை அனுமதிக்க முடியாது. அது வடக்கு மக்களுக்கு நாங்கள் செய்யும் துரோகமாகவே அமையும். எனவே வடக்கில் மாகாண சபை அமைய நாங்கள் ஆதரவளிக்கின்றோம்.

இதேவேளை வடக்கு- கிழக்கு மாகாணங்களுக்கு அரசியல் தீர்வு தேவை என்பதனை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அவசியமில்லை என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கின்றோம்.

எனினும் சாட்சிகள் மற்றும் ஆதாரங்களுடன் வடக்கு -கிழக்கு பகுதிக்கு அரசியல் தீர்வு என்பதனை நிரூபித்தால் அதனை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். அதில் எந்த சிக்கலும் இல்லை. நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் சமநிலைமையிலான அபிவிருத்திகள் மற்றும் வசதிகள் செய்யப்பட வேண்டும் என்பதிலும் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். (6)

# இலங்கை தமிழர்களுக்காக உயிர் தியாகம் செய்த 19 குடும்பங்களுக்கு திருமாவளவன் நிதி உதவி



(சென்னை)

இலங்கை தமிழர்களுக்காக உயிர்த் தியாகம் செய்த முத்துக்குமார் உட்பட 19 பேருக்கு வீரவணக்கம் செலுத்தும் வகையில் விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் பொதுக் கூட்டம் நடத்தப்பட்டது.

தங்கசாலை மணிகூண்டு அருகில் நடந்த கூட்டத்தில் கட்சியின் தலைவர் திருமாவளவன் எம்.பி. தலைமை தாங்கிப் பேசினார். அப்போது உயிர்த் தியாகம் செய்த 19 குடும்பங்களுக்கும் விடுதலை சிறுத்தைகள் சார்பில் நிதி உதவி அளிக்கப்படும் என்று தெரிவித்தார்.

இதற்கமைய கொளத்தூர் முத்துக்குமார் குடும்பத்துக்கு ரூ.2 இலட்சமும், . சென்னை எழில்வளவன், கடலூர் தமிழ்வேந்தன், கீழ்வேலி ராஜசேகர் ஆகியோரின் குடும்பத்துக்கு தலா ரூ.ஒரு இலட்சம் வீதம் 3 இலட்சமும் மேலும் சிறையில் உயிர் விட்ட ஆனந்தராஜ், கதிர்வேலு ஆகியோரின் குடும்பத்துக்கு தலா ரூ.25 ஆயிரமும் மீதமுள்ள 13 குடும்பங்களுக்கு தலா ரூ 25 ஆயிரம் வீதம் நிதி உதவி அளிக்கப்படும் . மொத்தம் ரூ .13 1/2 இலட்சம் நிதி வழங்கப்படும் என்று அறிவித்தார்.

மேலும் இவர்களில் எழில்வளவன், தமிழ்வேந்தன்,ராஜசேகர் குடும்பத்திற்கு மட்டும் மேடையில் தலா ரூ. ஒரு இலட்சம் நிதி உதவியை திருமாவளவன் வழங்கினார். (2-6)


International Training programme for Journalists on

**Media and Democracy**

**Denmark, Norway and Belgium -2010**

**Applications are invited for the above mentioned training programme due to be held in Denmark, Norway and Belgium - April 2010**

Journalists who have experience and writing and editing / Production in main streamNewspapers, and on TV and Radio, with five years experience are eligible to apply. As the course will be conducted in the English language, a working knowledge of the language and basic computer skills are minimum requirements.

The maximum number chosen for the programme will be around twenty (20). Women journalists are strongly encouraged to apply to ensure a gender balance of the participants of the programme.

Participants will be short – listed by an independent interview panel and the final selections will be make by the Danida Fellowship Centre of Denmark.

The programme is of three weeks duration. Air fare and accommodation costs will be met by the Danish organizers and a per diem will be paid for food and other expenses

Application forms can be collected between **9 a.m. and 5 p.m** on weekdays from
**No 96, Kirula Road, Colombo 5**
**or**
by sending a self –addressed stamped envelope to the above address.

**For more details please contact:**

**Azzam Ameen**
***Course Coordinator***
Sri Lanka Press Institute,
96, Kirula Road, Colombo 5.
Phone: 011 5353635 Fax: 011 5335500
Email: azzam@slpi.lk
Hotline: 0773 411111

**Please note that any form of canvassing will be a disqualification.**

(C-4389) **Please apply within 10 days of this advertisement.**


## மெய்வல்லுநர் போட்டி

யாழ். ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் செல்வி பிரதா நவரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் கலந்துசிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக வலிகாம கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் (வழிகாட்டல் ஆலோசனையும்) திருமதி பி. அம்பிகைபாகன் கலந்துகொள்ளவுள்ளார். (6-4)

## மின் தடை தொடர்பான அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

மத்திய மின் நிலையத்தின் திருத்த வேலைகள் காரணமாக நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி முதல் 12 மணிவரை பின்வரும் இடங்களில் மின் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் கந்தரோடை, மாசியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர், வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய பிரதேசங்களிலும்,

இணுவில் , உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, யாழ். நகரின் சில பகுதிகள், ஆனைக்கோட்டை, நவாலி,மானிப்பாய், சங்குவேலி, கோண்டாவில் ஆகிய பிரதேசங்களிலும் மேலும் சுன்னாகம், மல்லாகம், ஏழாலை , அளவெட்டி, தெல்லிப்பளை, பன்னாலை, சிறுவிளான் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும் என யாழ். பிரதேச மின் பொறி யியலாளர் அறிவித்துள்ளார். (2-4)

# அவுஸ்திரேலியாவில் தமிழர் ஒருவரின் கைது தொடர்பில் பொலிஸாருக்கு நீதிமன்று எச்சரிக்கை

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவில் பயங்கரவாத சட்டத்தின் கீழ் தமிழர் ஒருவர் துப்பாக்கி முனையில் கைது செய்யப்பட்டமை தொடர் பில், அந்த நாட்டு பொலிஸ் அதிகாரிகளுக்கு நீதிமன்றம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சிட்னியில் கணக்காளராக பணியாற்றிய ஆறுமுகம் ரஜீவன் என்ற 43 வயதுடைய தமிழரை, கடந்த 2007ஆம் ஆண்டு ஜூலை மாதம் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இதுதொடர்பான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் நீதிபதி கோலன் தலைமையில் நடைபெற்றது.


கைதுசெய்யப்படும்போது , தமது பொறுப்புக்களுக்கு மேலதிகமாக பொலிஸ் அதிகாரிகள் செயற்படக்கூடாது எனவும், அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்யக் கூடாது எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

கடந்த 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப் பேரலையின் போது நிதி வழங்கிய தமிழர்கள் , பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகின்றனர்.

எனினும் அந்தக் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாமல், அவர்கள் தொடர்ந்து தடுத்து வைக்கப்படுகின்றமை சட்டத்துக்கு முரணானது என அவர் தெரிவித்துள்ளார். (2-6)

# நளினி விடயத்தில் சோனியா தனது நிலைப்பாட்டை தெரிவிக்க வேண்டும்

## சுப்பிரமணிய சுவாமி



(சென்னை)

நளினி விடுதலை விவகாரத்தில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் நிலைப்பாடு என்ன? என்பது குறித்து ஜனதா கட்சி தலைவர் சுப்பிரமணியசுவாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி படுகொலை வழக்கில் சிறையில் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் நளினி முன் கூட்டியே விடுதலை கோரியுள்ளார்.

இந்த விடயத்தில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தனது நிலைப்பாட்டை தெரிவித்தாக வேண்டும். ராஜீவ் கொலையில் பெரிய குற்றவாளியான நளினி தனது வேண்டுகோள் தொடர்பாக தானே நேரில் ஆஜராக அனுமதிக்குமாறு மேல்நீதிமன்றில் மனு தாக்கல் செய்துள்ளார். குற்றவாளியான அவரை மேல் நீதிமன்றில் வாதாட அனுமதிக்கக் கூடாது.

மும்பை மராட்டியர்களுக்கே சொந்தம் என்ற சிவசேனா கட்சியின் கோஷம் நகைப்புக்குரியது.

இதுபோன்ற கருத்தை மராட்டிய மக்களே ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். நானே மும்பையில் இருந்து இரண்டு முறை எம்.பி. யாக தேர்வுசெய்யப்பட்டிருக்கிறேன். மராட் டிய மக்கள் எனக்கு வாக்களித்தார்கள். மராட் டிய மக்கள் ஒருபோதும் இன வெறியை ஆதரிக்கமாட்டார்கள் என்பதற்கு எனது வெற் றியே நல்ல எடுத்துக்காட்டு. இவ்வாறு சுப்பிரமணியசுவாமி கூறினார். (2-6)

# இறுதிச் சந்தர்ப்பத்தையும் கோட்டை விட்டது பாகிஸ்தான்
# ஒரே ஒரு இருபது-20 போட்டியிலும் ஆஸி. வெற்றி



(மெல்போன்)

தைடின் வேகத்தில் சிக்கிய பாகிஸ்தான் அணி ஒரே ஒரு இருபது-20போட்டியிலும் 2ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணியிடம் வீழ்ந்தது.

இதன் மூலம் பாகிஸ்தான் அணி அவுஸ் திரேலியாவில் விளையாடிய அனைத்துப் போட்டிகளிலும் தோல்வியடைந்து நாடு திரும்புகின்றது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட பாகிஸ்தான் அணி 3டெஸ்ட், 5ஒரு நாள் போட்டிகள் மற்றும் ஒரே ஒரு இருபது-20போட்டி கொண்ட தொடரில் விளையாடியது.

இதில் அவுஸ்திரேலிய அணி டெஸ்ட் தொடரை 3:0 என்ற கணக்கிலும், ஒரு நாள் தொடரை 5:0 என்ற கணக்கிலும் முழுமையாகக் கைப்பற்றியது.

இந்நிலையில் ஒரே ஒரு இருபது-20 போட்டி நேற்று மெல்போர்னில் நடைபெற்றது.

இப் போட்டியில் சுற்றுப்பயணத்தின் ஆறுதல் வெற்றிக்காக பாகிஸ்தான் அணி களமிறங்கியது. இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 18.4ஓவர்களில் 127 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் டேவிட் ஹசி ஆட்டமிழக்காது 31பந்துகளில் (ஒரு பவுண்டரி, 2சிக்ஸர்கள் அடங்களாக) 40ஓட்டங்களையும், அணித்தலைவர் மைக்கல் கிளார்க் 32,வோர்னர் 24ஓட்டங்களையும் எடுத்தனர்.ஏனையோர் இரட்டை இலக்கு ஓட்டத்தையேனும் பெறவில்லை.

பந்துவீச்சில் உமர்குல் 3விக்கெட்டுக்களையும், சோயிப் மலிக் 2விக்கெட்டுக்களையும், முகமட் ஆசிப் , நவீட் உல் ஹசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி ஆரம்பத்திலேயே ஆட்டம் கண்டது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான இம்ரான் பர்காத் 8ஓட்டங்களுடனும், இம்ரான் நசீர் பூச்சியத்துடனும், காலித் லத்தீப்6 ,சொகைல் மலிக் 3ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க பாகிஸ்தான் அணி 8.4ஓவர்களில் 59 ஓட்டங்களை எடுத்து 4விக்கெட்டுக்களையிழந்தது.

இந்நிலையில் இணைந்த அக்மல் சகோதரர்கள் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளித்தனர்.

எனினும் பாகிஸ்தான் அணி 20ஓவர்களில் 9விக்கெட்டுக்களையிழந்து 125ஓட்டங்களை மாத்திரமெடுத்து 2ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் கம்ரான் அக்மல் 33பந்துகளில் (7பவுண்டரிகள், 2சிக்ஸ்சர்கள் அடங்கலாக) 64ஓட்டங்களையும், உமர் அக்மல் 25பந்துகளில் 21ஓட்டங்களையும், உமர் குல் 10ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் தைட் 4ஓவர்கள் பந்துவீசி 13ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 3விக்கெட்டுக்களையும், வோட்சன், சிமித் ஆகியோர் தலா 2விக்கெட்டுக்களையும், நான்ஸ் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இதன் மூலம் அவுஸ்திரேலிய சுற்றுப் பயணத்தில் தாம் விளையாடிய 3டெஸ்ட், 5ஒரு நாள் போட்டிகள் மற்றும் ஒரே ஒரு இருபது-20போட்டியென அனைத்திலும் தோல்வியடைந்து நாடு திரும்புகின்றது.

இப்போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு வழியமைத்த தைட் ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.

# தொடர்ந்து 6ஆவது தொடரை வெல்லும் முனைப்பில் இந்திய அணி

## முதலாவது டெஸ்ட் இன்று ஆரம்பம்

(நாக்பூர்)

இந்தியா தென்னாபிரிக்க அணிகள் இடையேயான 2டெஸ்ட் போட்டித் தொடரில் முதலாவது டெஸ்ட் நாக்பூரில் இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

டெஸ்ட் தரவரிசையில் இந்தியா முதலாமிடத்தில் திகழ்கிறது. இதனை தக்க வைக்க இந்தத் தொடர் சவால் நிறைந்ததாக இருக்கும். 2ஆவது இடத்தில் இருக்கும் தென்னாபிரிக்க 2:0 என்ற கணக்கில் வென்றால் மட்டுமே முதல் இடத்தைப் பிடிக்கும். 1:0 என்ற கணக்கில் வென்றால் இரு அணிகளும் 123புள்ளிகளுடன் சமநிலையைப் பெறும்.

தாடையில் ஏற்பட்ட காயம் காரணமாக டிராவிட் இந்தத் தொடரில் ஆடவில்லை. எனவே டிராவிட்டுக்குப் பதிலாக இளம் வீரர் பத்திரிநாத்திற்கு வாய்ப்புக் கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காம்பீர், டெண்டுல்கர் துடுப்பாட்டத்தில் பலம் பெற்றுக் காணப்படுகிறார்கள். இருவரும் பங்காதேஷிற்கு எதிரான தொடரில் சதமடித்தனர். அதிரடி துடுப்பாட்ட வீரர் சேவாக்கின் தொடக்கத்தைப் பொறுத்து ஓட்டக்குவிப்பு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பந்துவீச்சில் சகீர்கான், இஷாந்த் சர்மா ஆகியோர் பங்களாதேஷ் தொடரில் முத்திரை பதித்தனர். தென்னாபிரிக்காவுக்கு எதிராகவும் சிறப்பாக பந்து வீசுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தென்னாபிரிக்க அணியின் துடுப்பாட்டத்தில் ஹரிஸ் (அணித்தலைவர்), சிமித், ஹசிம் அம்லா, டிவில்லியஸ் ஆகியோரும் ,பந்துவீச்சில் ஸ்ரெயன்,பர்னல், மோர்கல் ஆகியோரும் முத்திரை பதிக்கக்கூடியவர்கள்.

அந்த அணி சமீபத்தில் இங்கிலாந்துக்கு எதிரான தொடரை 1:1 என்ற கணக்கில் சமன் செய்தது. இந்திய அணி சமீபத்தில் பங்களாதேஷை 2:0 என்ற கணக்கில் வென்று இருந்தது.

தொடர்ந்து 6ஆவது டெஸ்ட் தொடரை வெல்லும் முனைப்பில் இந்தியா உள்ளது. தென்னாபிரிக்க அணி இறுதியாக 2008ஆம் ஆண்டு இந்தியாவில் விளையாடியது.

3டெஸ்ட் தொடர் கொண்ட போட்டியில் 1:1 என்ற கணக்கில் சமனிலையில் முடிந்தது.

**வீரர்கள் விபரம்**

**இந்தியா:** தோனி (அணித்தலைவர்), சேவாக், காம்பீர், முரளி விஜய், டெண்டுல்கர், லக்ஸ்மன், பத்ரிநாத், ரோகித் சர்மா, ஹர்ப



ஜன் சிங், சகீர்கான், அமித் மிஸ்ரா, சுதிப் தியாகி, ஓஜா, அபிமன்யூ மிதுன், விர்த்திமான் சகா.

**தென்னாபிரிக்கா:** சிமித் (அணித்தலைவர்), ஹசிம் அம்லா, ஆஸ்வெல் பிரின்ஸ், டிவில்லியர்ஸ், கலிஸ், டுமினி, பீட்டர்சன், பவுச்சர், ஹரிஸ், போத்தா, மெக்லரன், மோர்னே மோர்கல், பார்னல், ஸ்ரெயன், சோட்சோபே.

## 1000 தியேட்டர்களில் ஐ.பி.எல். போட்டி

(புதுடில்லி)

இந்தியா முழுவதும் ஆயிரம் சினிமாத் தியேட்டர்களில் ஐ.பி.எல் போட்டிகள் காண்பிக்கப்பட உள்ளன.

டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் ஒளிபரப்பாக இருப்பதால் மைதானத்தில் அமர்ந்து போட்டியைக் காணும் உணர்வினை ரசிகர்கள் பெறலாம்.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) சார்பில் 3வது இருபது-20தொடர் எதிர்வரும் மார்ச் 12முதல் ஏப்ரல் 25ம் திகதி வரை நடக்கிறது.

மொத்தமுள்ள 60போட்டிகளும் சினிமாத் தியேட்டரில் காண்பிக்கப்பட இருக்கிறது.

**"3டி" ஜாலம்**

அவதார் படத்தைத் தொடர்ந்து இறுதிப் போட்டி உட்பட சில போட்டிகளை "3டி" மூலம் காண்பிக்கும் திட்டமும் உண்டு. இதற்கான ஏற்பாடுகளை யு.எப்.ஓ மூவிஸ் நிறுவனம் செய்துவருகின்றது.

# ஓரம் சகல துறையிலும் ஜொலிப்பு; பங்களாதேஷை வீழ்த்தியது நியூசிலாந்து

(நேபியர்)

ஜேக்கப் ஓரம்-விக்டோரியின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் நியூசிலாந்து அணி 146ஓட்டங்கள் வித்தியாசத்தில் முதலாவது ஒரு நாள் போட்டியில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தியது.

நியூசிலாந்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணி ஒரே ஒரு இருபது-20போட்டி, 3ஒரு நாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் ஒரே ஒரு இருபது-20போட்டியில் நியூசிலாந்து அணி வெற்றிபெற்ற நிலையில் முதலாவது ஒரு நாள் போட்டி நேற்று நேபியரில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி ஜேக்கப் ஓரம்- புரூம் ஜோடியின் அதிரடியான இணைப்பாட்டத்தின் மூலம் 50ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களையிழந்து 336 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஜேக்கப் ஓரம் 40 பந்துகளில் (8 பவுண்டரிகள், 5சிக்ஸ்சர்கள் அடங்கலாக) 83ஓட்டங்களையும், புரூம் 73பந்துகளில் (7 பவுண்டரிகள் உட்பட) 71ஓட்டங்களையும், இங்ராம் 74பந்துகளில் (9 பவுண்டரிகள் உட்பட) 69ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சபியுல் இஸ்லாம் 4விக்கெட்டுக்களையும், சகாடாட் ஹுசைன், சகீப் அல்ஹசன் மற்றும் நயீம் இஸ்லாம் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.


பதிலுக்கு 50ஓவர்களில் 337ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணிக்கு தமீம் இக்பால், ஹயிஸ் ஜோடி நம்பிக்கையான இணைப்பாட்டத்தை வழங்கினர்.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 10.4ஓவர்களில் 71ஓட்டங்களை எடுத்த போது ஹயிஸ் 33ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த முன்னணி வீரர்கள் சோபிக்காத நிலையில் பங்களாதேஷ் அணி 43.5 ஓவர்களில் 190ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 146ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் தமீம் இக்பால் 69பந்துகளில் (10பவுண்டரிகள் உட்பட) 62ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் அணித்தலைவர் டானியல் விக்டோரி 3விக்கெட்டுக்களையும், மைக்கேய், ஜேக்கப் ஓரம் மற்றும் குப்தில் ஆகியோர் தலா 2விக்கெட்டுக்களையும் ,தௌப்பி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இவ்வெற்றியின் மூலம் நியூசிலாந்து



அணி 3போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது.

இப்போட்டியில் நியூசிலாந்து அணியின் வெற்றிக்காக சகல துறைகளிலும் ஜொலித்த ஜேக்கப் ஓரம் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

## அவசரகால...

தேசியக் கூட்டமைப்பு, ஜனநாய மக்கள் முன்னணி, எம்.எஸ். செல்லச்சாமி ஆகியோர் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தனர்.

மக்கள் விடுதலை முன்னணி வாக்கெடுப்பின்போது கலந்துகொள்ளவில்லை.ஐ.தே.கட்சியும் வாக்களிப்புக்கு எதிராக வாக்களித்ததுடன், ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா மட்டுமே சபையில் இருந்து எதிராக வாக்களிப்பதாக கூறினார்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் அனைத்தும் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தன. ஜனாதிபதி தேர்தல் நடைபெற்று முடிந்த பின்னர் அவசர காலச்சட்டத்தை நீடிப்பதற்கான முதலாவது வாக்கெடுப்பு இதுவாகும்.(ச-3,5,9)

## அரசியல் தீர்வு...

முடிபு கட்டி அவர்களுக்கு நிம்மதியான வாழ்வு ஒன்றினை பெற்றுக் கொடுப் பதே எமது நோக்கமாகும்.

யுத்தத்தினால் அழிவுற்ற அம்மக்களின் பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்பி அபிவிருத்தி அடையச் செய்ய எல்லா வகையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றார். (ச-9)

## மகனைக்...

வீட்டிலிருந்து வெளியே புறப்பட்டுச் சென்று இதுவரை வீடு திரும்பவில்லை என பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

இவர் வீடு திரும்பாததையடுத்து உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளில் தேடிய போதும் எதுவித தகவலும் கிடைக்கவில்லை எனவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர். (ச-5)

## தேர்தல் முடிபு...

தேர்தல் முடிவுகளில் இடம்பெற்ற மோசடிகளை ஆராய்வதற்காக சட்டத்தரணிகள் குழுவொன்றை நாம் நியமித்துள்ளோம்.

உரிய முறையில் தகவல்களை திரட்டி ஆதாரத்துடன் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகளை அவர்கள் செய்து வருகிறார்கள். இன்னும் சில தினங்களில் வழக்கு தொடரலாம் என எதிர்பார்க்கின்றோம் என்றார்.

அதேவேளை இரத்தினபுரியில் வாக்காளர் அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டதாக ஐக்கிய தேசிய முன்னணியினர் முன்வைத்த குற்றச்சாட்டு தொடர்பாக ஆராய்வதற்கு தேர்தல்கள் திணைக்களத்தின் அதிகாரிகள் குழுவினர் அங்கு சென்றுள்ளதாக திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார். (ச-5)

## தமிழ் மக்கள் விடுதலைப்...

மாதங்களுக்கு முன்னர் பெற்றிக் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமது இலங்கை விஜயம் தொடர்பான அறிக்கையை ஐக்கியநாடுகளின்பாதுகாப்பு பேரவை உப குழுவிடம் பெற்றிக் ஒப்படைத்துள்ளார்.

இன்னர்சிட்டி பிரஸ் நியூஸ் இணையத்தை மேற்கோள்காட்டி இலங்கை ஆங்கில ஊடகம் ஒன்று இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

மட்டக்களப்பில் தங்கிருந்தபோது அம்பாறை பிரதேசத்தில் இவ்வாறு சிறுவர்கள் படையில் இணைத்துக் கொள்ளும் நடவடிக்கை ஆரம் பிக்கப்பட்டுள்ளதாக தமக்குத் தகவல் கிடைக்கப்பெற்றதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் கருணாவிடம் வினவியபோது, தமக்கு இவ்வாறான ஓர் தகவல் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், சிறுவர்களை படையில் சேர்க்கும் நடவடிக்கையை உடனடியாக நிறுத்துமாறு தாம் இனிய பாரதிக்கு உத்தரவிட்டதாகவும் கருணா தம்மிடம் தெரிவித்துள்ளதாக பெற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

இனியபாரதியின் நடவடிக்கைகள் தொடர்பில் கருணா அதிருப்தியுடன் காணப்படுவதாகவும் தொடர்ந்தும் இவ்வாறான நடவடிக்கை களில் ஈடுபட்டால் காவல்துறையினர் நடவடிக்கை எடுப்பர் என இனிய பாரதிக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

# ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து...

தமிழ் மொழியில் தெரிவித்துள்ளார்.

ஆனால் மகிந்தவின் இந்த கோரிக்கையை நிராகரித்துள்ள பிரித்தானியா தமிழ் பேரவையின் மூத்த உறுப்பினர் சுரேன் சுரேந்திரன் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்என தெரிவித்துள்ளார்.

தமிழ்மக்கள் சுதந்திர தினத்தை கொண் டாடவில்லை வடக்கு – கிழக்கில் அவர்கள் மகிந்தவுக்கு வாக்களிக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இரண்டாவது தடவை ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின்னர் மகிந்த பங்கு பற்றிய முதலாவது வெளிப்படையான நிகழ்வு இதுவாகும். ஆனால் அவருக்கு எதிராக போட்டியிட்ட பொன்சேகாவை அவர் தாக்கி வருகின்றார்.

சுதந்திரதினத்திற்கு முன்னர் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொன்சேகாவின் ஆதரவாளர்கள் கொழும்பில் உள்ள வீதிகளில் இறங்கி தேர்தல் முடிவுகளிற்கு எதிராக பேரணி ஒன்றினை நடத்தியிருந்தனர்.

ஜனாதிபதியை தேர்ந்தெடுக்கும் மக் களின் உரிமைகளை மகிந்த கொள்ளை யடித்துள்ளதாக பொன்சேகா அங்கு பேசும் போது தெரிவித்து இருந்தார்.

அவர் உரையாற்றும் போது அவருக்கு ஆதரவாக அளிக்கப்பட்டு பின்னர் எரிந்த நிலையில் குப்பைத் தொட்டியில் இருந்து மீட்கப்பட்ட வாக்காளர் அட்டைகளையும் காண்பித்தார்.

என்னவிலை கொடுத்தாவது உங்களின் உரிமைகளை நாம் பெற்றுத் தருவோம் திருடிய வெற்றியை கொண்டாட நாம் அவர்களை அனுமதிக்கப்போவதில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆனால் தேர்தல் முடிபுகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை தேர்தல் ஆணையாளர் தயானந்தா திஸநாயக்கா மறுத்துள்ளார்

தேர்தலுக்கு முன்னர் பிரசாரங்களின் போது நடைபெற்றவை தொடர்பில் நான் நிறைவடையவில்லை ஆனால் தேர்தல் தினம் அமைதியாக இருந்ததுடன் முடிபுகளும் உண்மையானவை என அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்ட உள்ளூர் மற்றும் அனைத்துலக கண்காணிப்பாளர்கள் தேர்தல் பிரசாரம் மேற்கொள்ளப்பட்ட காலம் வன்முறை மிக்கதாக இருந்ததாக தெரிவித்துள்ளனர்.

அதன்போது 5 பேர் கொல்லப் பட்டிருந்தனர் ஆனால் தேர்தல் தினம் அமைதியாக இருந்ததாகவும் சிறு சம்பவங்களே நடைபெற்றதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேசமயம் நாடாளுமன்றத் தேர்தலை மேற்கொண்டு அதிகாரத்தை மேலும் உறுதிப் படுத்த மகிந்த முயன்று வருகின்றார்.

மகிந்தாவின் அடுத்த 6 வருடங்களுக்கான பதவிக்காலம் இந்த வருடம் நவம்பர் மாதம் ஆரம்பிக்கவுள்ளதாக உயர் நீதிமன்றம் கடந்த புதன்கிழமை தெரிவித்துள்ளது. மகிந்த இரு வருடங்களுக்கு முன்னர் தேர் தலை நடத்தியிருந்தார்.

ஊடகத்துறையினர் மீது வன்முறைகள் மேற்கொள்ளப்படு வதாக மகிந்த அரசு மீது குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. தேர்தலின்.

பின்னர் பல இணையத்தள ஊடகங்கள் மீது தடைகள் கொண்டு வரப்பட்டுள்ளன. ஒரு ஊடகவியலாளர் கைது செய்யப்பட்டுள்ளார். ஒருவர் காணாமல் போயுள்ளார். ஒருவர் தாக் குதலுக்கு உள்ளாகியுள்ளார். பலருக்கு கொலை அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள் ளது.

தற்போது ஜனாதிபதி மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார் ஆனால் மிக அதிகளவிலான குற்றச்சாட்டுகளுக்கு அரசு உட்பட்டு வருகின்றது என நியூயோர்க்கை தளமாக கொண்ட மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய பணிப்பாளர் பிராட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு மறுநாள் சில அதிகாரிகள் தமது அதிகாரங்களை தவறாக பயன்படுத்த முனைந்திருந்ததாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். மகிந்த அரசு 14 மூத்த இராணுவ அதிகாரிகளை பதவி விலக்கியுள்ளது.

அவர்கள் பொன்சேகாவின் ஆதரவாளர்கள் என அரசு கூறுகின்றது. அவர்களால் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

முன்னாள் இராணுவ அதிகாரிகள் 15 பேர் உட்பட 37 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அரச ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. கடந்த சனிக்கிழமை பொன்சேகாவின் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் போதும் பலர் கைது செய்யப் பட்டிருந் தனர்.

டசின் கணக்கான படை அதிகாரிகள் இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளனர் அரசுக்கு சார்பானவர்கள் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். தேர்தலுக்கு மறுநாளில் இருந்து பொன்சேகா மீதும் அவரின் ஆதரவாளர்கள் மீதும் அரசு பல குற்றங்களை சுமத்தி வருகின்றது. அவர்கள் ஜனாதிபதியை கொலை செய்ய முயன்றதாகவும் இராணுவப் புரட்சியை மேற்கொள்ள முயன்றதாகவும் அரசு குற்றம் சுமத்தியுள்ளது.

ஆனால் தேர்தல் முடிபுகளை நீதிமன்றத்தின் மூலம் பெறப்போவதாக பொன்சேகா தெரிவித்து வருகிறார். ஆனால் அதற்கான செயல் திட்டங்களை அவர் இன்றுவரை ஆரம்பிக்கவில்லை.

மகிந்த நேர்மையாக வெற்றி பெற்று இருந்தால் ஏன் என்னைக் கண்டு அஞ்சுகிறார். ஏன் எங்களின் சுதந்திரமான நடமாட்டங்களை தடுக்கிறார்? ஏன் எனது ஆதரவாளர்களை கைது செய்கிறார்? இந்தக் கேள்விகளை அவர் கடந்த புதன் கிழமை நடைபெற்ற பேரணியில் கேட்டிருந்தார் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## நாடாளுமன்ற உறுப்பினராக...

மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரனுக்கு அடுத்த நிலையில் வாக்குகளை பெற்றிருந்தார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.அருள்சாமி, 170 ஆண்டுகளுக்கு மேலாக அடிமைவாழ்வு வாழ்ந்து கொண்டு பல்வேறு அரசியல் தலைமைகளினால் ஏமாற்றப் பட்டு வரும் பெருந் தோட்ட தொழிலாளர்களுக்கு விடிவை ஏற்படுத்துவதற்கு இந்த நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை நான் பயன்படுத்துவேன். எனது அரசியல் ரீதியான பலத்தை பயன்படுத்தி பெருந்தோட்ட தொழிலாளர்களின் விடிவுக்கு தொடர்ந்து உழைப்பேன்.

யுத்தம் முடிபுக்கு கொண்டுவரப் பட்ட நிலையில் மலையக இளைஞர்கள் ஆயிரக்கணக்கில் சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்களை விடுதலை செய்வதற்கு ஜனாதிபதியும் நாடாளுமன்றமும் முயல வேண்டும் எனவும் கூறினார். (ச-9)

## வடக்கு மக்களின் உரிமையை...

இந்த அரசாங்கம் அந்த உரிமையை வடபகுதி மக்களிடமிருந்து பறித்துக்கொண்டது. இடம்பெயர்ந்த மக்கள் தமதுவாக்குகளைப்பயன்படுத்த போதுமான போக்குவரத்து வசதிகளை அரசாங்கம்ஏற்படுத்திக்கொடுக்கவில்லை.

எமக்கு சுதந்திரம் கிடைத்து 62 வருடங்கள் கடந்துள்ளன. எனினும் நமக்கு முழுமையான சுதந்திரம் கிடைத்திருக்கின்றதா? என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

அவசர காலச் சட்டத்தை நீடிப்பதன் முக்கியமான நோக்கம் என்ன என்பதை நாங்கள் மீண்டும் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்த அவசர காலச் சட்டம் நாட்டில் பயங்கரவாதத்தைத் தடுப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டது.

அது குறித்து எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. அந்தக் காலத்தில் அவசர காலச் சட்டத்தின் பிரதான நோக்கம் பயங்கரவாதத் தைத்தடுப்பதாகும்.

எனினும் தற்போது நாட்டில் பயங்கரவாதம் முடிபுக்குக் கொண்டு வரப்பட்டு 8 மாதங்கள் கடந்துள்ளன. இவ்வாறான நிலையில் தற்போது அவசர காலச் சட்டத்தை நீடிப்பதன் நோக்கம் என்ன என்பது முக்கியமானதாகும்.

அரசாங்கம் இந்த அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி ஊடகவியலாளர்களையும் ஊடக நிறுவனங்களின் செயற்பாடுகளையும் அடக்கி வருகின்றது.

அரசாங்கத்தின் அரசியல்வாதிகள் தமது வன்முறைகளுக்கு இதனைப்பயன்படுத்துகின்றனர். ஜே.வி.பி இதனை ஆரம்பம் முதல் எதிர்த்து வருகின்றது.

கடந்த காலத்தில் இலட்சக் கணக்கான மக்கள் அரசாங்கத்திடம் சரண் புகுந்தனர். அவர்களை முகாம்களில் இந்த அரசாங்கம் அடைத்தது. அரசாங்கம் கடந்த தேர்தலில் பல்வேறு உறுதி மொழிகளை முன் வைத்தது என்றார். (ச-5)

## நாட்டில் நல்லநிலை ஏற்...

அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது, விரைவில் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படும். அதற்கான திகதியை உரிய நேரத்தில் நாம் அறிவிப்போம். நாட்டில் சரியான நிலைமை ஏற்படும்வரை அவசர காலச்சட்டம் நீடிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

வடக்கில் கண்ணிவெடிகளை முற்றாக அகற்றுவதற்கு விரைவான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறோம். அவை முழுமையாக அகற்றப்படாததால் மீள்குடியேற்றத்தில் சிறிது தாமதம் ஏற்பட்டுள்ளது என அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார்.

ஐக்கியதேசியகட்சி, தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆகியன அவசரகாலச்சட்டத்திற்கு எதிராகவாக்களித்ததுடன் மக்கள் விடுதலை முன்னணியினர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5,3)


IBM Computers for Sale
@
UNI - COMPUTER WAREHOUSE

Original IBM (With Lock)



Intel Pentium IV 3.20 GHZ
1 GB Ram 80 GB HD
LCD Monitor DVD Rom

நம்ப முடியாத விலையில் இச் சலுகை இருப்புக்கள்
Price - Rs.34500/= only கையிலிருக்கும் வரை மட்டுமே!!

Internet Browsing Center களுக்கும் அரச, தனியார் நிறுவனங்களுக்கும் உயர் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் மிகவும் உகந்தது !!!

System (CPU) மட்டும் Rs.22000/= இன்றே முந்துங்கள் !!!

IBM கணனி என்றால் No - 1 தரம் என்பது உலகறிந்த விடயம் !!!
அனேக அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் விரும்பி பாவிக்கப்படுவது!!!
நீடித்த பாவனைக்காலம் மிகக்குறைந்த மின்சாரத்தில் இயங்க கூடியது !!!

விபரங்களுக்கு :- UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862



முதலாண்டு நினைவலைகள்

மலர்வு 05 04 1937

உதிர்வு 15 02 2009



அமரர்

திருமதி செ.சிவக்கொழுந்து

பண்பின் உருவமாய்
பாசத்தின் உறைவிடமாய்
எம்மையெல்லாம் காத்து நின்ற
எமது அன்னையைப் போற்றி நிற்கிறோம்

கண்ணகை அம்மன் கோவிலடி,
இணுவில் மேற்கு,
இணுவில்.

பாசமுள்ள
குடும்பத்தினர்.

(C-4393)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06 .02. 2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.